Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–27 | 11 –08–2004 | புதன்கிழமை | ஓசை –175

கனேசா நகை மாளிகை

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்



இல:123. பஜார் வீதி, வவுனியா. T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-10122)

# தென்னிந்தியாவிலிருந்து திரும்பும் அகதிகளின் பாதுகாப்பான பயணத்திற்கு உதவிசெய்க!


## யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதிகளிடம் தமிழ்ச்செல்வன் கோரிக்கை

**தென்னிந்தியாவில் இருந்து அபாயகரமானதும், கடினமானதுமான கடற்பயணத்தை மேற்கொண்டு தாயகம் திரும்பும் அகதிகள் பாதுகாப்பான பயணத்திற்கு உதவி புரியுமாறு ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலய இலங்கைக்கான பிரதிநிதி நெய்ல்றைற்றிடம் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.**

நேற்றுக் கிளிநொச்சியில் சமாதான செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பு ஒன்றிலேயே அரசியல் துறைப் பொறுப்பாளர் இக் கோரிக்கையை விடுத்தார். அதில் அவர் மேலும் தமது பயணத்திற்கான ஒழுங்குகளை எந்தவொரு நிறுவனமும் பொறுப்பேற்காத நிலையில் அதிக கஷ்டமான சூழ்நிலையின் கீழ், முகாம்களில் தங்கியிருந்த அகதிகள் கடினமான கடல் கடந்த பயணத்தை மேற்கொள்கின்றனர். இந்தநிலை தகுந்த முடிவின்றி தொடர்கிறது. ஆனால் தனிமைப்படுத்தப்பட்ட அகதிகள் அவர்கள் திருப்தியடைக்கூடிய வாறான பாதுகாப்பு மற்றும் வதிவிட வசதிகளைப் பெறக்கூடியதாகக் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

ஐரோப்பாவில் வசிக்கும் தமிழர்களிடையே உள்ள கட்டாய

(12ஆம் பக்கம் பார்க்க)



-தம்மை மீளக்குடியமர அனுமதிக்கக்கோரி -

## வலி.வடக்கு மக்கள் அடுத்தவாரம் சாகும் வரை உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலிகாமம் வடக்குப் பிரதேசங்களிலிருந்து இடம் பெயர்ந்து வாழ்ந்து வரும் மக்கள் தம்மை தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரி தெல்லிப்பளை பிரதேச செயலகம் முன்பாக அடுத்த வாரம் முதல் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். தமது வாழ்விடங்களை ஆக்கிரமித்துள்ள சிறிலங்கா இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேற வேண்டுமெனவும், தம்மைச் சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்கக் கோரியும், பல போராட்டங்களை நடத்தியும், பயனற்றுப் போன நிலையிலேயே இவ்வாறு சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்த தாம் ஏற்பாடுகள் செய்து வருவதாக வலிகாமம் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர். (33)

## பொ.ஐ.மு.நிறைவேற்றுக் குழுவை உடன் கூட்டக் கோரிக்கை

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தை உடனடியாக கூட்ட வேண்டும் என பொதுஜன ஐக்கிய முன்னணித் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பில் முன்னணியின் பொதுச் செயலாளர் தி.மு. ஜெயரட்ணவுக்கு முன்னணியின் தலைவர்கள் எழுத்துமூல அறிவித்தலை விடுத்துள்ளனர். இதற்கு பதிலளித்துள்ள ஜெயரட்ண அடுத்த பாராளுமன்ற அமர்வின்போது அதற்கான அழைப்பை விடுப்பதாகத் தெரிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப் பொறுப்பில் இருந்து சனாதிபதி விலகியமை, இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்- அதிரடிப்படையினர் இன்று அம்பாறையில் சந்திப்பு

அம்பாறையில் இன்று விசேட அதிரடிப்படையினருக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது. அக்கரைப்பற்று யுத்த நிறுத்தக் கண்காணிப்பு அலுவலகத்தில் இந்தப் பேச்சு வார்த்தை நடைபெறவுள்ளது. இந்த சந்திப்பிற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மாவட்ட பொறுப்பாளர் றைமோ தலைமை தாங்கவுள்ளார். தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் குயிலின்பனும், விசேட அதிரடிப் படையின் சார்பில் காவல்துறை அத்தியட்சகர் ரட்ணநாயக்கவும் பங்கேற்கவுள்ளனர். (32)

## சிறிலங்காவிற்கான அமெ. தூதரகம் காலவரையறையின்றி மூடப்பட்டது

### - பாதுகாப்பு காரணம் எனத் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் உள்ள சிறிலங்காவிற்கான அமெரிக்கத்தூதரகம் நேற்றுக்காலை முதல் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு இந்தத் தூதரகம் மூடப்பட்டதாகத் தூதரகப் பேச்சாளர் கிறிஸ்ஜோன் நேற்று அறிவித்துள்ளார்.

இதேவேளை, தூதரகத்திற்கு அருகில் வேறொரு கட்டடத்தில் இயங்கி வந்த அமெரிக்க நிலையம், நூலகம் மற்றும் உதவி நிறுவனமும் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதாகத் தூதரகப் பேச்சாளர் கிறிஸ் ஜோன் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தத் தூதரகம் ஏன் திடீரென மூடப்படுகிறது என்பதற்கான

(12ஆம் பக்கம் பார்க்க)

~மட்டக்களப்பு மாவட்டத்தில்~

## இரு துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்களில் ஒருவர் பலி; ஒருவர் படுகாயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற இருவேறு துப்பாக்கி சூட்டுச்சம்பவங்களில் ஒருவர் கொல்லப்பட்டார் மற்றவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்க்களப்புக் களுவாஞ்சிக் குடியிருப்புப் பிரதேசத்தில் மட்டக்களப்பு கல்முனை வீதியில் நேற்று மாலை 7.30மணியளவில் நடந்த துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானநபரே கொல்லப்பட்டவராவர்.

இவர் மத்திய முதலாம்

(12ஆம் பக்கம் பார்க்க)


## கண்ணிவெடியகற்றல் தொடர்பான அமெ.அதிகாரி குழுவினர் யாழ்.விஜயம்

(வடமராட்சி)

உலகளாவிய ரீதியில் கண்ணிவெடிகளை அகற்றும் திட்டத்தின் அமெரிக்க ராஜாங்கத் திணைக்கள உயர்மட்டக் குழுவொன்று நேற்று யாழ். குடாநாட்டிற்கு வருகை தந்துள்ளது.

விசேட விமானப்படை விமான மூலம் பலாலி வந்தடைந்த குழுவில பிரதிப்பணிப்பாளர் ரிச்சர்ட் கிட் மற்றும் எஸ்.ரி.வி. ஹாரிஸ் இலங்கையின் அரசியல் விவகாரங்களுக்கான அமெரிக்க தூதுவராலயத்தின் பொறுப்பதிகாரி கொடி.சி.

(12ஆம் பக்கம் பார்க்க)



## நோர்வே அனுசரணையாளர் அடுத்தவாரம் இல.வருவார்

நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்கள் எதிர்வரும் வாரத்தில் இலங்கைக்கு வரவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. நோர்வேயின் பிரதி வெளியுறவுத்துறை அமைச்சர் விதார் ஹெல்கேசன் உட்பட்ட குழுவினரே இலங்கைக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது சனாதிபதி கடிதமொன்றை அண்மையில் அனுப்பியதன் பின்னரே இந்த விஜயம் மேற்கொள்ளப்படுகிறது. (32)

## வரிவிளம்பரம்

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர்ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோகொப்பிலேமனேட்டிங் போன்றவைகளையும் உடனுக்குடன் செய்துகொள்ள பிள்ளையார் பொத்தகசாலை கண்டி வீதி கிளிநொச்சி. T/P.021 2285750 (சி/10064)


## சிரமதானப்பணி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புதுமுறிப்புக் கிராமத்தில் எதிர்வரும் 14,15 ஆம் திகதிகளில் இம்மாத உலர்உணவு விநியோகத்திற்கான 'சிரமதானப் பணி புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. எனவே குறித்த திகதியில் ஆண்களை மட்டும் இச் சிரமதானப் பணியில் கலந்துகொள்ளுமாறு புதுமுறிப்பு கிராம அபிவிருத்தி சங்கத்தினர் கேட்டுக்கொள்கின்றனர்.(15)

# வவுனியா—கொழும்பு புகையிரதத்தில் பொலிசார் எனக்கூறிக் கொள்ளை

(செட்டிகுளம்)

வவுனியாவில் இருந்து கொழும்பு சென்ற புகையிரதத்தில் பொலிசார் போன்று அடையாளம் காட்டி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. வவுனியாவில் இருந்து நேற்று முன்தினம் கொழும்பு நோக்கி சென்ற இரவு புகையிரதத்தில் இந்தியாவில் மேற்படிப்பு மேற்கொள்வதற்காக விசா பெற இரண்டு இளைஞர்கள் கொழும்பு சென்றுள்ளனர். அவர்கள் சென்ற புகையிரதப் பெட்டியினுள் ஏறிய சில நபர்கள் தாங்கள் பொலிசார் என்று அடையாளம் காட்டி, அந்த பெட்டியினுள் இருந்த அனைவரையும் சோதனை செய்துள்ளனர். இதன் போது மேற்படி இரண்டு இளைஞர்களின் அடையாள அட்டையை பெற்றுள்ளனர். இதன் பின்னர் அம்பேபுஸ்ச பகுதிக்கு புகையிரதம் சென்ற போது அவர்கள் இறங்கியதுடன் அந்த இளைஞர்களையும் இறக்கியுள்ளனர். இதன் பின்னர் அந்த இளைஞர்களிடம் இருந்து கையடக்க தொலைபேசி, நகைகள், பணம் என்று சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. (21)

# துணுக்காய் மாதர் அ.சங்கங்களில் ஒன்று கூடலும் நிர்வாகத் தெரிவும்

(மல்லாவி)

துணுக்காய்ப் பிரதேசங்களின் மாதர் அபிவிருத்தி சங்கங்களின் ஒன்றுகூடலும் தெரிவு நிகழ்வும் யோகபுரம் மகாவித்தியாலய மண்டபத்தில் கடந்த 7ஆம் திகதி பி.ப.3.30 மணிக்கு துணுக்காய்ப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கெ.புனிதன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் கருத்துரைகளை துணுக்காய்ப் பிரதேச செயலகக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், முல்லை. மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி.வேழினி, கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை உபசெயலாளர் த.சுந்தரலிங்கம், யோகபுரம் மகா வித்தியாலய அதிபர் திருமதி. க.கிருஷ்ணபிள்ளை ஆகியோர் கருத்துரை வழங்கினர். இந்நிகழ்வில் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருடன் 13 உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெற்றது.(24)

# வவு.பூந்தோட்டப் பகுதி விபத்தில் காயமடைந்த ஒருவர் மரணம்

(செட்டிகுளம்)

வவுனியா பூந்தோட்டப் பகுதியில் இடம் பெற்ற வீதி விபத்தில் காயம் அடைந்த நபர் அனுராதபுரம் வைத்திய சாலையில் இறந்திருப்பதாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை இரவு பூந்தோட்ட பாடசாலைக்கு முன்னால் முச்சக்கர வண்டியும், உந்துருளியும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன. இதன் போது உந்துருளியில் வந்த இருவரும் கடுமையான காயங்களுக்கு உள்ளாகினர்கள். காயம் அடைந்தவர்கள் வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் அனுப்பப்பட்டனர்.அங்கு கே.புஸ்பராஜா (33) என்பவர் இறந்துள்ளார் என்றும் மற்றைய நபரான கண்ணன் (வயது26) கடுமையான காயங்களுடன் சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.(21)

## சிரமதானப் பணி மூலம் வடிகால்கள் சீரமைப்பு

வட்டக்கச்சி பிரதேச அரசியல் துறையினரால் வட்டக்கச்சி ஜொனிபுரம் கிராமத்தில் நேற்றுமுன்தினமும், நேற்றும் சிரமதானப்பணி நடைபெற்றது. மழை காலங்களில் வடிகால்கள் சீரின்மையால் மழைநீர் தேங்கி நிற்பதனால் இக்கிராம மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர் கொண்டு வந்தனர்.இதனைப் போக்க சிரமதானம் மூலம் வடிகால் பகுதியே தற்போது சீராக்கப்பட்டுள்ளதுடன்,அதனையண்டிய பகுதியில் காணப்பட்ட பற்றைகளும் வெட்டி அகற்றப்பட்டுள்ளது. (15)

## கண்சிகிச்சைக்குப் பதிவுசெய்யும் திகதி மாற்றம் குறித்து அறிவிப்பு

வெளிநாட்டில் இருந்து வருகைதந்த கண்சத்திரசிகிச்சை நிபுணர் அவர்களால் ஐயன்கன்குளம் தியாகதீபம் திலீபன் மருத்துவமனையில் 15.08.2004 ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த "கட்ராக்" நோயாளர்களை பதிவுசெய்தல் தற்போது 16.08.2004 திங்கட்கிழமையாக மாற்றப்பட்டுள்ளது. இது நண்பகல் 12 மணிதொடக்கம் 4.00 மணிவரை இடம்பெறவுள்ளது என தியாகதீபம் திலீபன் மருத்துவசேவையில் நடுவப்பணியகம் அறியத்தந்துள்ளது.

## காட்டா விநாயகர் வருடாந்த உற்சவம்

(முள்ளியவளை)

முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 20.08.2004 அன்று நண்பகல் 12.10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

19.08.2004 அன்று பி.ப 4.00 மணிக்கு செங்குந்தர் பகுதியில் இருந்து கொடி கொண்டுவரப்பட்டு 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் உற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து 10நாட்கள் இடம் பெறவுள்ளது.

மேற்படி உற்சவத்தில் 7ஆம் நாள் வேட்டைத்திருவிழாவும் 8ஆம் நாள் சப்பறத் திருவிழாவும், 9ஆம் நாள் தேர்த்திருவிழாவும், 10ஆம் நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளதாக மேற்படி ஆலய பரிபாலன சபைத் தலைவர் சி.ஜெயபாலன் ஆசிரியர் தெரிவித்துள்ளார். (ஆ)

# சிறந்த தேர்ச்சி பெற்ற மாணவருக்கு சி.க.கூ.சங்க சமாசம் ஊக்குவிப்பு

முல்லை மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவு சமாச வங்கியில் வைப்பிலிட்டு க.பொ.த.(சா/த)தரத்தில் ஐந்து பாடங்களில் A சித்தியும், தற்போது வெளியாகிய க.பொ.த: (உ/த)த்தில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கப்பட உள்ளது. எனவே மேற்படி உள்ள மாணவர்கள் தங்கள் சான்றுகளை உடனடியாக கிளை,பிரதேச அலுவலகங்களிலோ அல்லது மாவட்ட சமாசத்திலோ பதிவு செய்து உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு மாவட்டப் பொது முகாமையாளர் தெரியப்படுத்தியுள்ளார்.

## பிரதேச முன்பள்ளிகளின் விளையாட்டுவிழா

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேச முன்பள்ளிகளின் பிரதேச விளையாட்டுவிழாஇன்று புதன்கிழமை பி.ப 1.30மணிக்கு முள்ளியவளை மு/வித்தியானந்தா கல்லூரியின் பின்தள விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வானது தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடனும் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் ஆதரவுடனும் முள்ளியவளைப் பிரதேச உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களால் நடாத்தப்படும் பிரதேச முன்பள்ளிகளின் விளையாட்டுவிழா என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)


## கார்விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ,6சிறீ.மொறிஸ் ஒக்ஸ் போட்கார், 6சிறீ. 504 கார் விற்பனைக்கு உண்டு.

மேலதிக விபரங்களுக்கு :-

No.132
தேக்கவத்தை,
வவுனியா.

(சி-10066)


# வவு.மாமடு வீதி விபத்தில் இரு ஊர்காவல் படையினர் காயம்

வவுனியா மாமடு வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இரண்டு ஊர்காவல் படையாளிகள் காயம்அடைந்து வவுனியா பொது மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள்மீது இராணுவ வாகனமே மோதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றதாக வவுனியா பொலிசார் தெரிவிக்கின்றனர்.

வவுனியாவில் அன்மைய நாட்களாக அதிக அளவான வீதி விபத்துக்கள் இடம்பெற்று வருவதாகவும் இதற்கான காரணம் அதிக அளவிலான வாகனப் பாவனை என்றும் வவுனியா போக்குவரத்துப் பொலிசார் தெரிவிக்கின்றனர். (21)

## துயர் பகிர்கின்றோம்



அமரர்
பரமசாமி மகேந்திரன்

எமது கழகத்தை சேர்ந்த சுகிர்வரன், சுகந்தன் ஆகியோரது தந்தையாரான பரமசாமி, மகேந்திரன் அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருடன் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோழர்கள் விளையாட்டுக்கழகம்
விசுவமடு

(சி.9778)





## பயணியர் பேருந்துப் புதிய பணி

### தமிழீழப் போக்குவரவுக் கழகம்

### கிளிநொச்சி – கல்மடு

மேற்படி பேருந்துப்பணி 13.08.2004 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கிற்கு அமைவாக நடைபெறும் என்பதனைப் பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

நேர ஒழுங்கு

கிளிநொச்சி – கல்மடு

| | | | | |
|---|---|---|---|---|
| | கிளிநொச்சி | வட்டக்கச்சி | இராமநாதபுரம் | கல்மடு |
| காலை- | 10.00 | 10.40 | 11.00 | 11.15 |

கல்மடு–கிளிநொச்சி

| | | | | |
|---|---|---|---|---|
| | கல்மடு | இராமநாதபுரம் | வட்டக்கச்சி | கிளிநொச்சி |
| பகல்- | 12.30 | 12.45 | 01.05 | 01.45 |

முகாமையாளர்,
பேருந்துப்பகுதி.
கிளிநொச்சி.

(4898)

# ஏகாதிபத்தியவாதிகளுக்கெதிராக போரிட இராணுவம் தயாராக இருக்க வேண்டும்

## -சிம்பாப்வே சனாதிபதி முகாபே பணிப்புரை

**சிம்பாப்வே நாட்டை சீர்குலையச் செய்வதற்கு மும்முரமாக ஈடுபட்டிருக்கும் ஏகாதிபத்தியவாதிகள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். பாதுகாப்புப்படைகள் மீண்டும் சண்டையிடுவதற்குத் தயாராக வேண்டும் என்று சனாதிபதி றொபேட் முகாபே வலியுறுத்தியுள்ளார்.**

நாட்டின் பாதுகாப்புப்படை ஏற்படுத்தப்பட்டு 24 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக இடம்பெற்ற வைபவத்தில் முகாபே உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரிட்டனிடமிருந்து 1980 ஆம் ஆண்டு சுதந்திரமடைந்த பின்னர் பெறப்பட்ட பயன்களைப் பாதுகாப்பதற்கு இராணுவத்தைக் கட்டியெழுப்ப எனது அரசாங்கம் தொடர்ந்தும் உதவியை வழங்கும். எனது அரசாங்கத்தின் காணிச் சீர்திருத்தக் கொள்கையைக் கவிழ்ப்பதற்கு முன்னால் காலணித்துவ சக்தியான பிரிட்டன் முயற்சி செய்கிறது. உள்ளூர் வெளிநாட்டு எதிரிகள் காணிச்சுவீகரிப்பு விவகாரம் தொடர்பாக சிம்பாவ்வேயின் பொருளாதாரத்தை சீர்குலைத்துள்ளனர். என்றும் சனாதிபதி முகாபே குற்றம் சாட்டியுள்ளார்.



ஈராக்கில் மக்டடா அல்சதார் ஆதரவுப் போராளியொருவர் நஜாப் நகரில் முகாம் ஒன்றிலிருந்து மோட்டார் எறிகணை ஒன்றை செலுத்துகிறார்.

## –சூடானின் மேற்குப் பகுதியில் 2000 துருப்பினரை நிலை நிறுத்தும்–

# ஆபிரிக்க ஒன்றியத்தின் யோசனை சூடான் அரசாங்கத்தால் நிராகரிப்பு

சூடானில் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள டாப்பூர் பிராந்தியத்தில் 2000 இற்கும் மேற்பட்ட துருப்புக்களை நிலைநாட்டும் ஆபிரிக்க ஒன்றியத்தின் யோசனைகளை அந்நாட்டு அரசாங்கம் நிராகரித்துள்ளது.



பாக்தாத் வீதியில் குண்டுவெடிப்பு நிகழ்ந்த இடத்தில் காவல் கடமையில் ஈடுபட்டுள்ள ஈராக்கிய தேசிய படைவீரர்.

டாப்பூரின் பாதுகாப்பு சூடான் அரசாங்கத்தின் தனித்துவமான பொறுப்பாகுமென்று சூடானின் வெளிவிவகார அமைச்சர் முஸ்தபா இஸ்மாயில் தெரிவித்துள்ளார்.

300 பேரைக்கொண்ட கண்காணிப்புப் படையொன்றை உருவாக்குவது பற்றி ஆபிரிக்க ஒன்றியத்தின் அதிகாரிகள் கலந்துரையாடுவதற்கு முன்னரே இந்தக் கருத்து வெளியாகியுள்ளது. தமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு சூடானுக்கு மேலும் கால அவகாசம் வழங்க வேண்டும் என்று அரேபிய லீக் அமைப்பும் கோரியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# ஜோர்தான் பணயக்கைதிகள் இருவரும் நேற்று முன்தினம் விடுதலை

(பாக்தாக்)

ஈராக் தீவிரவாதிகள் ஜோர்தான் பணயக்கைதிகள் இருவரை நேற்று முன்தினம் விடுதலை செய்துள்ளனர்.

ஜோர்தான் நாட்டவர்களான சயிர்சாத், அகமட்சலாமி இருவரும் ஈராக்கில் சாரதிகளாகப் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களைக் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர்.

சாரதிகள் பணிபுரிந்த டாவூத் அன்ட் பார்னர்ஸ் நிறுவனம் உடனடியாக ஈராக்கில் தனது செயற்பாடுகளை முடக்கிக் கொள்ள வேண்டும். இல்லையேல் ஜோர்தானியர்களைக் கொன்றுவிடப் போவதாக தீவிரவாதிகள் எச்சரிக்கை செய்திருந்தனர்.

இதனையடுத்து அந்த நிறுவனம் ஈராக்கில் தமது செயற்பாடுகளை நிறுத்திக் கொண்டுள்ளது. இதனையடுத்தே தீவிரவாதிகள் இரண்டு ஜோர்தான் பணயக் கைதிகளையும் நேற்று முன்தினம் விடுதலை செய்துள்ளனர். ஜோர்தானியர்கள் உடல் ஆரோக்கியமாக இருப்பதாகவும், பாக்தாத்திலுள்ள ஜோர்தான் தூதரகத்தில் தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும் ஓரிரு தினங்களில் ஜோர்தான் செல்லவுள்ளதாகவும் ஜோர்தான் அரசு தெரிவித்துள்ளது.

## சதாமிற்கு ஆதரவாக பன்னாட்டு வழக்கறிஞர் குழு

(லண்டன்)

நீதிவிசாரணையை எதிர்கொள்ளும் ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம் ஹீசைன் சார்பாக வாதாட பன்னாட்டு வழக்கறிஞர்கள் குழு ஒன்றை ஏற்படுத்த உலக மனித உரிமைகள் அமைப்புக்கள் சில முயன்று வருகின்றன.

இந்த பன்னாட்டு வழக்கறிஞர்கள் குழுவில் சென்னை வழக்கறிஞர் பி.வி பக்தவக்சலமும் இடம் பெறுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# கூட்டணிப் படைகள் நஜாப் நகரில் முன்னேறி வருவதாக அமெ.தெரிவிப்பு

(பாக்தாத்)

ஈராக்கிய கூட்டணிப் படைகள் நஜாப் என்ற புனித நகரில் முன்னேறி வருவதாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.

நஜாப் நகரில் அமெரிக்கப்படைகள் முஸ்தபா அல்சதார் என்ற சியா ஆன்மீகத் தலைவரின் ஆதரவாளருடன் கடும் சண்டையில் ஈடுபட்டு வருகின்றனர். இரண்டு மாநிலங்களில் பாதுகாப்பு நிலவரம் மோசமடைந்து வருவதனால் போலந்து தலைமையிலான துருப்புக்கள் கூட்டணிப் படைகளிடம் இராணுவ அதிகாரத்தை ஒப்படைத்துள்ளன. இத்தகைய பின்னணியிலே அமெரிக்க சனாதிபதியின் கருத்துக்கள் வெளியாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை ஈராக்கில் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன. இதன் உச்சக்கட்டமாக இடைக்காலப் பிரதமர் இயாத் அலாபியின் அலுவலகம் சூறையாடப்பட்டுள்ளது.

ஈராக்கின் கிழக்கே 300 கிலோமீற்றர் தொலைவில் உள்ள நஸ்ரியா நகரில் இடைக்காலப் பிரதமர் இயாத் அலாபியின் அலுவலகம் அமைந்துள்ளது. இஸ்லாமிய ஜிகாத் அமைப்பைச் சேர்ந்தவர்கள் அந்த அலுவலகத்தைச் சூறையாடியுள்ளனர். அலுவலகத்தினுள் புகுந்த அவர்கள் உள்ளே இருந்த ஊழியர்களைத் தாக்கினர். கட்டடத்தை தீ வைத்தும் கொழுத்தியுள்ளனர்.

இந்தக் காட்சிகளை விடியோ படம் பிடித்த தீவிரவாதிகள் அதனை வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அந்த ஒளி நாடாவை அனுப்பியும் உள்ளனர்.

ஒளிநாடாவின் இறுதியில் அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டுள்ளனர். அதில் இடைக்கால பிரதமர் அலாபி அமெரிக்காவின் கைக்கூலி, உடனடியாக அவரது கட்சி உறுப்பினர்கள் ஈராக்கை விட்டு வெளியேற வேண்டும் என்றும் எச்சரிக்கை செய்துள்ளனர்.



ஈராக்கில் நிலைகொண்டுள்ள பன்னாட்டுப்படைகளை வாபஸ் பெறுமாறு கோரி பஸ்ரா நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தும் சியா முஸ்லிம் ஆதரவாளர்கள்.

# இருபத்தொரு வருடங்களில் என்றுமில்லாதவாறு மசகெண்ணையின் விலை உலக சந்தையில் அதிகரிப்பு

(லண்டன்)

உலக சந்தைகளில் மசகெண்ணெய்யின் விலை மேலும் உயர்ந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.


நஜாப்நகரில் சண்டையை நிறுத்துமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகளை முஸ்தபா அல்சதார் நிராகரித்ததையடுத்து அமெரிக்க மசகு எண்ணெய் 89 சதவீதத்தால் அதிகரித்து 44.84 டொலர்களை அடைந்துள்ளது. எனவும் இது கடந்த 21 வருட கால வரலாற்றில் அடையப்பட்ட மிகவும் உச்சமான விலையென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஈராக்கிய கிளர்ச்சியாளர்கள் எண்ணெய்க் குதங்கள் மீது தாக்குதல் நடத்தக் கூடுமென்ற அச்சத்தின் காரணமாக லண்டனிலும் மசகு எண்ணெய்யின் விலை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

# துருக்கியின் இரு ஹோட்டல்களில் குண்டுவெடித்து ஒருவர் பலி

## –பயங்கரவாதத் தாக்குதல் என்கிறது பொலிஸ்

துருக்கிய தலைநகரில் அமைந்துள்ள இரு ஹோட்டல்களில் நேற்று அதிகாலை இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், எட்டுப் பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவம் ஒரு பயங்கரவாதத் தாக்குதலாகத் தெரிகிறது என்று துருக்கியின் பொலிஸ்துறைத் தலைவர் தெரிவித்துள்ளார். ஹோட்டல் குண்டு வெடிப்புகளைத் தொடர்ந்து தலைநகரான இஸ்தான்புல் நகருக்கு வெளியே அமைந்துள்ள எரிவாயுக் களஞ்சிய சாலையிலும் குண்டுகள் வெடித்துள்ளதாகவும் இதன் போது எவரும் காயமடையவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



ஈராக்கில் பணியாற்றும் தமது படைவீரர்களைச் சந்தித்து உரையாடி கைலாகு கொடுக்கும் போலந்துப் பிரதமர் மரெக்பெல்கா

# நியாப்-II திட்டத்தில் உரிய பயனைப்பெற அனைவரும் உறுதியுடன் செயற்பட வேண்டும்

## த.பொ.மே நிறுவனப் பொறுப்பாளர்



(அலுவலக செய்தியாளர்)

**"நியாப்-II திட்டத்தின் மூலம் பெறப்படும் நிதியை நாங்கள் சரியான முறையில் பயன்படுத்தி அதன்மூலம் எங்களை வளப்படுத்திக்கொள்ள, அத்திட்டத்தினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த நாங்கள் எல்லோரும் உறுதியுடன் செயற்பட வேண்டும்."**

இவ்வாறு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற நியாப்திட்டம் II அறிமுகவிழாவில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இத்திட்டத்தின் மூலம் குளங்களைப் புனரமைக்கும் நடவடிக்கை கடந்த மூன்று ஆண்டுகளாக வடக்கு-கிழக்கு பிரதேசங்களிலே உலகவங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. நியாப்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இத்திட்டத்தினை தமிழர் தாயகப் பகுதியில் செயற்படுத்த சிறிலங்கா அரசாங்கம் உடன்படவில்லை. பின்னர் விடுதலைப்புலிகளால் கொடுக்கப்பட்ட அழுத்தம் காரணமாகவும், உலகவங்கியினர் மேற்கொண்ட முயற்சியாலும் இங்கும் இத்திட்டத்தினை நடைமுறைக்குக் கொண்டுவந்தனர்.

நியாப் I திட்டத்தின் செயற்பாடுகளை மீளாய்வு செய்வதனடிப்படையிலே நியாப் II திட்டத்தினை எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற ஒழுங்குவிதிகளை உலக வங்கியினர் எடுத்திருக்கிறார்கள். இந்த திட்டத்தின் அடிப்படை நோக்கம் என்னவென்றால் விவசாயிகளை ஒருபலமுள்ளவர்களாக மாற்றியமைப்பதேயாகும். விவசாயிகளுக்குத் தேவையான குளங்களைப் புனரமைத்து, அவர்களுக்குத் தேவையான ஜீவனோபாய கடன்களை வழங்கி விவசாய செய்கையை மேற்கொள்வதன் மூலம் விவசாயிகளைச் சொந்தக்காலிலே நிற்கவைப்பதாகும். ஆனால் இது கடந்தகால செயற்பாடுகளிலே எதிர்பார்த்த வெற்றியைத் தராத நிலையிலே விவசாயிகளைப் பலப்படுத்தும் செயற்பாட்டில் அவர்கள் இப்பொழுது ஈடுபட்டு வருகின்றார்கள். விவசாயிகள் நீரைச் சரியான முறையில் பேணிப்பயன்பெற வேண்டுமென்பதற்காக அவர்களுக்கான ஒரு வலுவூட்டல் நிகழ்வும், அவர்களைப் பலப்படுத்துகின்ற நிகழ்வும் இந்தத் திட்டத்திலே ஆலோசனையாக வழங்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக நீரைப்பயன்படுத்துவதில் விவசாயிகள் மிகுந்த அக்கறையோடு செயற்பட வேண்டுமென்ற கருத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும், அதைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம், இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற வரட்சியின் மூலம் பல இடங்களில் குடிநீருக்குக் கூட தட்டுப்பாடு நிலவுகின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே குளங்களில் தேக்கப்படும் நீரை சரியான முறையில் முகாமைத்துவம் செய்து பயன்படுத்த வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.நீர் முகாமைத்துவத்தை விவசாயிகள் எதிர்காலத்தில் மிகவும் கண்டிப்பாக கையாள வேண்டியது அவசியமானதாகும்.

உலக வங்கியின் பிரதிநிதிகள் வெளிநாட்டவர்கள் அவர்கள் எங்களுக்குக் கற்பிக்கின்றார்கள் ஒரு குளம் புனரமைப்புச் செய்யப்பட்டால் அதில் நிச்சயமாக அப்பகுதி மக்களின் பங்களிப்பு இருக்க வேண்டுமென்று. ஏனென்றால் அந்தக் குளம் ஒவ்வொருவருக்குமுரியது என்ற எண்ணம் அவர்களுக்குத் தோன்ற வேண்டும். அதன் மூலம் தான் குளத்தினைத் தொடர்ந்து பராமரிப்பார்கள் என்ற நோக்கமே இதற்குக் காரணமாகும்.

கடந்த காலங்களிலே அரசாங்கம் குளங்களை புனரமைப்பதில் திட்டமிட்டு செயற்பட்டுவந்தது. பாரிய குளங்களை புனரமைத்து சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு தமிழர் பகுதியை அபகரிப்பதற்காக திட்டமிட்டு செயற்பட்டு வந்தார்கள். இப்பொழுதும் அதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன. ஆகவே எங்களது பகுதியில் உள்ள குளங்களைப் புனரமைப்புச் செய்யும் செயற்பாட்டில் நாங்கள் மிகவும் அக்கறை கொண்டு செயற்பட வேண்டும். ஆகவே இந்த நியாப் II திட்டத்தின் மூலம் பெறப்படும் நிதியை நாங்கள் சரியான முறையில் பயன்படுத்தி அதன் மூலம் நாங்கள் எங்களை வளப்படுத்திக் கொள்ள, அத்திட்டத்தினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த நாங்கள் எல்லோரும் உறுதி பூண்டு செயற்பட வேண்டும் என்பதுதான் இந்த நியாப் திட்டம் II அறிமுக விழாவின் முக்கிய கருத்தாக இருக்கிற ஆகவே இந்தத் திட்டத்தின் வெற்றிக்கு அனைவருட உழைக்க வேண்டும் என்றார். (ச.தீ)

-முள்ளியவளைப் பகுதியில்-

# உலக உணவுத்திட்டத்தின் கீழ் வீதிகள் பல புனரமைப்பு

2004ஆம் ஆண்டுக்கான உலக உணவுத் திட்டத்தின் கீழ் முல்லை அகதிகள் புனர்வாழ்வு நிறுவன அனுசரணையுடன், கரைதுறைப்பற்று பிரதேச சபை முள்ளியவளை உபஅலுவலகத்தினூடாக முள்ளியவளைப் பிரதேசத்தில் வீதிப்புனரமைப்பு ஆரம்பிக்கப்பட்டு துரிதமாக வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மேற்படி திட்டத்தின் கீழ் இப் பிரதேசத்திற்குட்பட்ட வற்றாப்பளை சுருளிவீதி, கேப்பாப்புலவு கொட்டடி விநாயகர் வீதி, முள்ளியவளை செங்குந்தா வீதி (பசீலன்வீதி), 1ஆம் குறுக்குத்தெரு, முள்ளியவளை தெற்கு உசாவீதி என்பன அவ்வப்பகுதி மக்களின் பங்களிப்புடன் புனரமைப்பு நடைபெற்று வருகின்றது. ஒவ்வொரு வீதிப்புனரமைப்பிலும் அவ்வப்பகுதியைச் சேர்ந்த சுமார் 100இற்கும் மேற்பட்டவர்கள் பங்களித்து வருகின்றனர். (ஆ)

# முல்லைத்தீவு நிலையத்தில் டிப்ளோமா முன்னோடித்தேர்வு

முல்லைத்தீவு நிலையத்தில் பயிலும் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா பகுதிII ஆசிரியமாணவர்களுக்கான முன்னோடித் தேர்வு கீழ்க் குறிப்பிடப்படும் நேர அட்டவணைக்கமைய நடைபெறுமெனவும் சம்பந்தப்பட்ட ஆசிரிய மாணவர்களைத் தவறாது தேர்வுக்கு சமுகமளிக்குமாறும் சிரேஷ்ட விரிவுரையாளர் க.சரவணபவன் அவர்கள் கேட்டுக் கொள்கின்றார்.

14.08.2004 மு.ப.8.30-11.30 கல்வி வழிகாட்டலும், ஆலோசனையும், பி.ப.12.30-3.30 மொழித்திறன், 15.08.2004-மு.ப.8.30-11.30 பாடவிதான முகாமையும், பாடசாலை ஒழுங்கமைப்பும், பி.ப.12.30-3.30 பொதுக்கற்பித்தலும், சிறப்புக்கற்பித்தலும் (தமிழ், சமூகக்கல்வி, வர்த்தகம்) (08)

# பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற்குழு தெரிவு

(மல்லாவி)

மல்லாவி மத்திய கல்லூரியில் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற்குழுத் தெரிவு மத்திய கல்லூரி மாநாட்டு மண்ட பத்தில் அண்மையில் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் மா.தெய்வேந்திரம் தலைமையில் இடம் பெற்றது. கருத்துரைகளை முல்லை மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் அறிவன்பன் வழங்கினார். தெரிவுகளும் இடம் பெற்றன. தலைவராக திருமதி கோ.தேவராசாவும் (மத்திய கல்லூரி அதிபர்), உபதலைவராக பா.புஸ்பவதி, செயலாளராக கா. புண்ணியநாதன், உபசெயலாளராக மரியாம் பிள்ளை, பொருளாளராக சி.சிவகுமார், நிர்வாக உறுப்பினர்களாக அ.அமிர்தலிங்கம், தே.செல்வராசா, செ.அரவிந்தன், திருமதி, த.மனோகரன், திருமதி த.இராயேஸ்வரி, ப.நவரட்ணம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேற்படி நிகழ்வில் யாழ். மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் தாயகம், பிரதேச செயலாளர் ப.தியாகராசா பிரதேசப் பொறுப்பாளர் செ. புனிதன், மாணவர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி வெண்ணிலா ஆகியோருடன் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (24)

# சிறப்புற நடைபெற்ற வீரமுரசு கலைநிகழ்வு

(முள்ளியவளை)

வீரமுரசு கலைநிகழ்வு முள்ளியவளைப் பிரதேசத்தில் சிறப்புற நடைபெற்றது.

மேற்படி நிகழ்வானது தண்ணீரூற்று வலய அரசியல் துறைப் பொறுப்பாளர் தென்றல் மாறனின் ஒழுங்குபடுத்தலில் நீராவிப்பிட்டி பொது விளையாட்டு மைதானத்தில் அலங்கரிக்கப்பட்ட மேடையில் கடந்த 5 ஆம் திகதி இரவு 7.30 மணிக்கு முள்ளியவளை பிரதேச கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் கி.தியாகராசா தலைமையில் ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வாக பொது ஈகச் சுடரினை முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் மயூரன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து நிகழ்வின் தலைவரின் தலைமையுரை இடம் பெற்றது கருத்துரையினை முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை ஊடகப்பேச்சாளரும் முல்லைத்தீவு மாவட்ட வன்னித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளருமான வேதவனம் நிகழ்த்தினார். தொடர்ந்து நிகழ்வுக்கான சிறப்பு கருத்துரையினை தமிழீழ நிதர்சன பிரிவின் தமிழீழ திரைப்பட உருவாக்கப்பிரிவு பொறுப்பாளர் க.சங்கர் நிகழ்த்தியதையடுத்து வித்தியானந்தாக் கல்லூரி மாணவன் றசிவனின் தமிழரின் தாகம் எனும் கவிதையும் அதையடுத்து முள்ளியவளை பிரதேச ஈழநாத செய்தியாளர் பார்த்தீபனின் கருத்துரையமர்வும் இடம் பெற்றது அதனையடுத்து சுவிற்சர்லாந்தில் இருந்து வருகைதந்துள்ள ராஜசுலோஜனா, டொன் போஸ்கோ என்பவர்களின் மகள்களான சுமி, அபி ஆகிய இருசகோதரிகளின் பாடலும் அசைவும் இடம் பெற்றது அதனைத்தொடர்ந்து முள்ளியவளை மேஜர் பசீலன் இயல் இசை நாடக கலாமன்றத்தினரின் அனுசரணையுடன் தனயோகநாயனின் நெறிப்படுத்தலில் முள்ளியவளை கலைமகள் வித்தியாலய மாணவ மாணவிகளின் கோவலன் நாடகம் இடம் பெற்று நிகழ்வு நிறைவானது. மேற்படி நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட கிராம அபிவிருத்தி சங்கங்களின் பொறுப்பாளர் து.ஈழவன் நிராவிப்பிட்டி கிராம அலுவலர் ஆகியோருடன் அப்பகுதி தேசியஎழுச்சிப்பேரவையினர்.பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.(ஆ)

# நிரந்தர காணி அனுமதிப் பத்திரம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கிருஸ்ணபுரம் கிராம குடியிருப்பு மக்களுக்கான காணி நிரந்தர அனுமதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு அண்மையில் கரைச்சி பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் செ.ஸ்ரீரெங்கநாதன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கிருஸ்ணபுரம் கிராம மக்களுக்கான நிரந்தர காணி அனுமதிப் பத்திரத்தினை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கிருஸ்ணபுரம் கிராம சேவை அலுவலர், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் உட்பட, பொது மக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

அன்றைய நிகழ்வில் 94 காணி உரிமையாளர்களுக்கு நிரந்தரக் காணி உரிமைப் பத்திரம் வழங்கப்பெற்றது.

1983ஆம் ஆண்டிற்கு பின் முதன் முதலாக மேற்படி கிராமத்திற்கு நிரந்தரக்காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

# பாடசாலை ரீதியிலான சிறந்த பெறுபேறுகள்

வெளியான க.பொ.த. உயர் தரப்பரீட்சை முடிவுகளில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகள் மூன்றினது மாணவர்கள் பெற்ற முன்னணிப் பெறுபேறுகள் வருமாறு,

**கிளி.மத்திய கல்லூரி**

**கலைப்பிரிவு**

பாவேந்திரன் பிரதீபன் 2ஏ,சி,(9), ஜனனி கார்த்திகேசு ஏ, 2பி, சர்மிலா றொய்ஸ் ஏ,பி,சி, றெணிக்கா செல்வராசா பி, 2சி, தனுசா கந்தையா 2பி,சி, விஜிந்திரா விக்னேஸ்வரன் 2பி,சி, டயானா மகாலிங்கம் பி,2சி, கயேந்தினி பாலசிங்கம் 3சி, ஜெயந்தினி தம்பிப்பிள்ளை 2சி,எஸ், செல்லத்துரை யசோதரன் 2சி, எஸ், சரஸ்வதி முத்தையா 2சி, எஸ்.

**வர்த்தகப்பிரிவு**

கதிர்காமவேலன் திலீப்குமார் 2ஏ,பி (7), கிருசா இராசையா ஏ,2பி (11), கேதாரநந்தினி பரமலிங்கம் 2ஏ,சி,(17), பாலகிருஷ்ணன் பகீரதன் 3பி, சிதம்பரநாதன் சுஜீவன் பி,சி,எஸ், திருலோகமூர்த்தி மயூரன் ஏ,பி,சி, சிவலிங்கம் ஜெயானந் பி,சி.எஸ், அ.சசிதரன் பி,2சி, பா.கலையன்பன் ஏ,பி,சி, பா.சுதர்சன் பி,2சி, ந.புஸ்பராணி 3சி, நெ.சிவாஜினி 3சி, ச.பிரேமாவதி ஏ,2பி, ப.துவாரகி பி,2சி, நெ.கெங்காதரன் 2சி, எஸ், நா.மயூரன் ஏ,2பி, ந.பிரபாகரன் 3சி, நெ.சுபாகரன் 2பி,சி, ம.பிரதீபன் 3சி, ந.யாமினி பி,2சி, பா.கயமுகி ஏ,2சி, அ.நளாயினி 2பி,சி, அ.றொசவின் பி,2சி, க.தனுசா 2பி,சி, ப.விஜயகுமார் 2பி,சி, உ.ஜெயந்தகுமார் 2பி,சி, வ.சாமிலா 3பி, ம.துவாரகா பி,2சி, ம.கெங்கையாளியான் 2பி,சி, கி.தனேஸ் பி,சி,எஸ், நா.பிரியதர்சினி 3சி, க.ஜெனித்தா 3சி.

**உயிரியல்பிரிவு**

கோபாலபிள்ளை பிரசாந் ஏ,2பி,(3), சிவநாதபிள்ளை மதிவதனன் 3பி, (4), நடேசன் திலீபன் பி,2சி,(6), செல்வநாயகம் கிருசாந்தன் பி,2சி,(7), சந்திரிகா கனகலிங்கம் ஏ,2சி,(8), சிவசங்கரி செல்வரட்ணம் பி,2சி, (9), நிசாந்தினி நடராசா 3சி,(10), சண்முகநாதன் பிரதீபன் 3சி,(12), வினோஜா செல்வரட்ணம் 3சி,(16).

**கணிதப்பிரிவு**

பிரான்சிஸ் ஜெஸ்மின் ஜெயமலர் ஏ,பி,சி,(1), தர்மசூரியர் யதீஸ் பி,2சி,(2), தம்பிராஜா நேசமுருகன் 3சி,(7), ராசரட்ணம் சஞ்சீவன் 2சி,எஸ்,(8), பிரபாகரன் சாள்ஸ் அன்ரனி பி,2எஸ்,(9), மகேந்திரராசா அமலன் சி,2எஸ்,(15).

**வட்டக்கச்சி மகாவித்தியாலயம**

**கலைப்பிரிவு**

வி.அருணா 2ஏ,பி,(1), ச.ரோகினி 2ஏ,பி,(2), கு.பிரசாந்தி ஏ,2பி,(4), பா.கோமளா 2ஏ,பி,(5), பா.யாழினி ஏ,பி,சி,(6), எ.றெஜீபா 3பி,(51), சி.சந்திராதேவி ஏ,பி,சி,(45).

**வர்த்தகப்பிரிவு**

ப.சயந்தினி 2ஏ,பி,(12), கு.சஜீவினி ஏ,2பி,(39),

**உயிரியல்பிரிவு**

பு.தர்மீசன் ஏ,2பி,(2), இ.வாகீசன் 2சி,எஸ்,(20), தி.மனோஜா சி,2எஸ்,(30).

**கணிதப்பிரிவு**

ம.தேவகரன் 3எஸ்,(26).

**முல்லை.பாரதி வித்தியாலயம்**

**கலைப்பிரிவு**

தி.இலங்கேஸ்வரன் ஏ,2பி,(08), இ.சசிகரன் ஏ,பி,சி, க.சந்திரகலா 3பி, இ.பிறேமிலா 2பி,சி,

இதேவேளை இப்பாடசாலையில் கலைப்பிரிவு முதல் தடவையாக ஆரம்பிக்கப்பட்டு இப்பரீட்சையில் 14 மாணவர்கள் தோற்றி இதில் பல்கலைக்கழகத்திற்கு 12 மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர். (08)

# தலைவரின் தீர்க்க தரிசன சிந்தனையில் உருவான தே.எ.பேரவை மக்கள் கோட்டையாக எழுந்து நிற்கிறது

(தென்மராட்சி)

**தேசிய எழுச்சிப் பேரவையானது தமிழீழத் தேசியத் தலைவரின் தீர்க்கதரிசன சிந்தனையில் உருவாகி இன்று மக்கள் கோட்டையாக எழுந்துநிற்கிறது என யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சொலமன் சிறில் தெரிவித்தார்.**

தென்மராட்சியில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் தென்மராட்சி தேசிய எழுச்சிப் பேரவையின் புதிய பணிமனைத் திறப்புவிழாவில் கலந்துகொண்டு ஆற்றிய உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தலைவரின் தீர்க்க தரிசனமான சிந்தனையினால் தமிழீழத்தில் உருவானதே தேசிய எழுச்சிப் பேரவை. இம்மண்ணில் தமிழர்கள் மீது சிங்கள ஏகாதிபத்தியம் வலிந்து மக்கள் மீது போரைத் திணித்தபோது போர் எழுச்சிக் குழுவாகவும் இந்த மண்ணில் நிலையான சமாதானத்திற்காய் சமாதானக் காலத்தில் அரசியற் செயற்பாடுகளை முன்னெடுக்க தேசிய எழுச்சிப்பேரவையாகவும் உருவானது.. தேசிய எழுச்சிப் பேரவை என்றொரு மக்கள் அரணை அரசியல் வடிவத்தை தலைவர் அவர்கள் உருவாக்கிய போது வடக்குக் கிழக்கில் இராணுவம் சூழ்ந்திருக்கும் பிரதேசத்தில் இச்செயற்பாடுகள் சாத்தியமா? எனச் சந்தேகம் தெரிவித்த பொழுது காலத்தின் தேவையறிந்து தலைவர் அவர்களோ மக்கள் உங்களுக்குப் பாதுகாப்புக் கவசமாக இருப்பார்கள். உங்களுக்கு உரிய பாதுகாப்பை அவர்கள் தருவார்கள் என்று பணித்தார். ஆனால் இன்று மக்கள் கோட்டையாக, அரணாக எழுந்து நிற்கின்றது அந்தத் தேசிய எழுச்சிப் பேரவை என அவர் தெரிவித்தார். காலை 10.30 மணியளவில் சாவகச்சேரி கந்தையா வீதியில் புதிய பணிமனை திறந்துவைக்கப் பட்டது.

தேசியக்கொடியினை தென்மராட்சிக்கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு.கலைவாணன் ஏற்றிவைத்தார். பொதுச்சுடரினை மாவீரர் மரியதாசின் சகோதரியும், மாவீரர் குமணனின் தாயாரும் தென்மராட்சி மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் அன்புவும், யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொருளாளர் சிவராஜாவும், சாவகச்சேரி தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ம.பேணாட்டும் ஏற்றிவைக்க, பெயர்ப்பலகையினை தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் ஜீவாஅவர்கள் திரைநீக்கம் செய்துவைத்தார். செயலகத்தினை சாவகச்சேரி றிபோக் கல்லூரியின் உபஅதிபரும் தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத்தலைவருமான ச.அருந்தவபாலன் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழி அவர்களும் கலந்துகொண்டார். (28)

### சுயதொழில் முயற்சிக் கடன்

யாழ்ப்பாணம் செயலர் பிரிவில் உள்ள 47 பயனாளிகளுக்கு சமுர்த்தி வங்கியினால் சுயதொழில் முயற்சிக் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.மேற்படி பிரதேச செயலர்பிரிவில் வாழும் சுயதொழில முயற்சியாளர்களின் பொருளாதார மேம்பாட்டினைக் கவனத்தில் கொண்டே இக் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (33)

# கண்ணி வெடி அகற்றும் பணியில் மோப்ப நாய்களை ஈடுபடுத்த முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்- மாவட்டத்தில் கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கைக்கு அமெரிக்காவில் இருந்து பெறப்படவுள்ள ஆறு மோப்ப நாய்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக யாழ்- செயலக கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

கண்ணிவெடி அகற்றும் திட்டத்தின் முதலாவது கட்டத்தை ஆரம்பிப்பதற்கு அமெரிக்காவில் இருந்து ஆறு மோப்ப நாய்களைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். யாழ்.நகரில் அரியாலை மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் முதற் கட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்றும், அதன் பின் ஏனைய .பகுதிகளுக்கும் விஷ்த்தரிக்கப்படும் என்றும் யாழ்-செயலக வட்டராங்கள் மேலும் கூறியுள்ளன.

# யாழ்.சிறைச்சாலையில் நிலவிவந்த அமைதியின்மை முடிவுக்கு வந்தது

(யாழ்ப்பாணம்)

கடந்த சில தினங்களாக யாழ். சிறைச்சாலையில் நிலவி வந்த குழப்பமான சூழ்நிலை நேற்று முன்தினம் மதியத்துடன் சுமுக நிலையினை அடைந்தது.

தன்னை வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யக்கோரி மரண தண்டனைக் கைதி கோப்ரல் ராஜபக்ஷ கடந்த வெள்ளி முதல் மேற்கொண்டிருந்த உண்ணா விரதப் போராட்டம் நேற்று நண்பகலுடன் கைவிடப் பட்டது.

கைதியான கோப்ரல் ராஜபக்ஷவினை ஓரிரு தினங்களுள் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக சிறைச சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை சிறைச்சாலையின் பிரதி அத்தியட்சகரை இடமாற்றம் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கைதிகளால் மேற்கொள்ளப்பட்டு வந்த உண்ணாவிரதப் போராட்டமும் நேற்று நண்பகலுடன் கைவிடப்பட்டுள்ளது.

சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தின் வேண்டுகோளையடுத்தே கைதிகள் உண்ணா விரதப் போராட்டத்தை கைவிட்டிருந்ததாகச் சிறைச்சாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதையடுத்தே கடந்த சில தினங்களாக யாழ். சிறையில் நிலவி வந்த அமைதியின்மை முடிவுக்கு வந்துள்ளது. (27)

# சிறுவர் உரிமைகள் பற்றி விழிப்புணர்வு நடவடிக்கையில் த.பு.கழகம் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சிறுவர் நலத்திட்டத்தின் கீழ் யாழ்.குடாநாடெங்கும் சிறுவர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டில் சிறுவர் உரிமை மீறல்களும் சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. இதனைக்கருத்திற் கொண்டே தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் இவ்விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரதிநிதிகள் குடாநாட்டின் பல பகுதிகளிற்கும் சென்று சிறுவர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும், கருத்தூட்டல் நிகழ்வுகளையும் நடாத்துவதுடன், உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டுள்ள சிறார்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவருகின்றனர்.(33)

# யாழ்.இல் 17 விவசாயக் கிராமங்களில் விவசாய அபிவிருத்தி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள 17 விவசாயக்கிராமங்களில் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் நிதியுதவிகளுடன் மேற்கொள்ளப்படவுள்ள இவ் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் விவசாய ஆராய்ச்சி, விவசாயிகளுக்கான துறைசார் பயிற்சிகள், தொழில்மேம்பாட்டு உபகரணங்கள் வழங்கல், உதவிகள் வழங்கல் என்பன நடைமுறைப்படுத்தப்படுமெனத் தெரிய வருகின்றது.

கடந்தகால யுத்தம் மற்றும் இடப்பெயர்வுகள் என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ள யாழ்.குடாநாட்டு விவசாயிகளின் தொழில் மேம்பாடுளைக் கவனத்திற் கொண்டே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (33)

# ஐ.ம.சுதந்திர முன்னணி அரசிற்கு இ.தொ.காங்கிரஸ் ஆதரவளிக்காது

## - கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தகவல்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தினுள் ஏற்பட்டுள்ள முரண்பாட்டையடுத்து அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க திட்டமிட்டிருந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனது முடிவை மாற்றிக் கொண்டுள்ளது என கொழும்பு அரசியல் வட்டாரங்களிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவைப் பெறுவதற்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையிலான அரசாங்கம் கடந்த இருமாதங்களாக பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்தது. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்டமானைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். இதனையடுத்து அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவது குறித்து இ.தொ.கா. தீவிரமாக ஆலோசித்து வந்தது. ஆனால் கடந்த வெள்ளிக்கிழமை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப் பதவியில் இருந்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விலகியிருந்தார். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியான ஜே.வி.பி. யுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே சனாதிபதி பதவி விலகியதாக கருதப் படுகின்றது. சனாதிபதி பதவி விலகியதையடுத்து அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும் முடிவினை இ.தொ.கா. மாற்றியுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. அரசாங்கத்துக்குள் முரண்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில் தாம் அரசாங்கத்துடன் இணைவது தமது கட்சிக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்றும், தமது செல்வாக்கு குறைவடையலாம் என்றும் இ.தொ.கா.வின் தலைமைப்பீடம் கருதுவதாக தெரிகின்றது. இதனைவிட இடைக்கால நிர்வாக சபை குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும், அதனை விடுதலைப் புலிகளுக்கு வழங்க வேண்டும் என்ற கொள்கையினை இ.தொ.கா.கொண்டுள்ளது. ஆனால் அரசாங்கத்துக்குள் இவ்விடயம் தொடர்பிலும் முரண்பாடு காணப் படுகின்றது. பாராளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்ற அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் தேர்தல் முறையினையும், நிறைவேற்று சனாதிபதி ஆட்சி முறையினையும் மாற்ற அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதற்கு இ.தொ.கா. முற்றுமுழுதாக எதிர்ப்புத் தெரி விக்கின்றது. இந்த நிலையில் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதில் பயன் இல்லையென இ.தொ.கா.கருதுவதாக தெரிகின்றது என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

# கிழக்கிலிருந்து அரிசியைக் கொள்வனவு செய்ய அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே நடவடிக்கை

கிழக்கு மாகாணத்திலிருந்து அரிசி கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக வாணிப மற்றும் நுகர்வோர் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

மகாபொல கண்காட்சி எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை சம்மாந்துறையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கு அமைச்சர் நேற்று கிழக்குப் பகுதிக்கு விஜயம் செய்துள்ளார். இந்த விஜயத்தின் போது அரிசி ஆலை உரிமையாளர்களையும் சந்தித்து அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். ஒரு கிலோ வெள்ளை அரிசி 25 ரூபா வீதம் கொழும்புக்கு அனுப்பி வைக்க முடியும் என அரிசி ஆலை உரிமையாளர்கள் அமைச்சருக்கு தெரிவித்திருக்கின்றனர். கிழக்கு மாகாண அரிசி ஆலைகளிலிருந்து அரிசியை கொள்வனவு செய்து குறைந்த விலைக்கு விற்பனை செய்ய உடன் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய அதிகாரிகளை பணித்துள்ளார்.

# ஆவணி 13 முதல் 17வரை மடுவீதி 24மணிநேரமும் திறந்திருக்கும்

## சிறி. பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

வருடாவருடம் கொண்டாடப்படும் பெரியமடுத் திருப்பதியின் திருநாளை முன்னிட்டு ஆவணி 13 இலிருந்து 17ஆம் திகதிவரை, மடுவீதியை 24 மணிநேரமும் திறந்து பாவனைக்கு அனுமதிக்க பாதுகாப்பு அமைச்சு முடிவெடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

குறைந்தது இரண்டு இலட்சம் பக்தர்களாவது கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படும் மடுத் திருப்பதியின் வருடாந்த யாத்திரை நிகழ்வுகளுக்காக ஏற்கனவே பக்தர்கள் நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து பயணிக்க ஆரம்பித்துள்ள நிலையில், பக்தர்களின் பயண வசதி கருதி, மடுவீதியை 24 மணிநேரமும் திறந்து வைக்க முடிவெடுத்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சுஅதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.பாதுகாப்புக் காரணங்களுக்காக, இதுவரை பகலில் சில மணிநேரங்களே திறந்து விடப்பட்ட மடுவீதி, இம்மாதம் 13ஆம் திகதியிலிருந்து 17ஆம் திகதிவரை இவ்வாறு முழுநேரமும் திறந்திருக்கும மடுவீதியின் இரு மருங்கிலும் பணியிலுள்ள விடுதலைப் புலிகளும் சிறிலங்கா இராணுவத்தினரும் இணைந்து எடுத்துள்ள இம்முடிவின் படியே இந்த ஒழுங்கு அமுலுக்கு வரவுள்ளதாகக் கூறப்படுகிறது.

# 'காஸ்' விலையேற்றத்தால் வற்வரியை நீக்க முயற்சி

(கொழும்பு)

அண்மையில் எல்.பி காஸ்சிலிண்டர் ஒன்றின் விலை 70 ரூபாவால் அதிகரித்ததையடுத்து அதன் 'வற்' வரியை நீக்குவது தொடர்பாக வர்த்தக நுகர்வோர் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே முயற்சியெடுத்துள்ளார்.கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது இது தொடர்பாக நீண்டவிளக்கமளித்த அவர் இன்று நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்திலும் இந்த யோசனையை முன்வைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி வற்வரி நீக்குமிடத்து எல்.பி.காஸின் விலை குறைவடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.


பயிற்சி நிறைவு நிகழ்வில்...


விருது வழங்கிக் கௌரவிப்பு




**02.** பட்டதாரிகள் நியமனத்தில் இடம் பெற்ற முறைகேடுகளைக் கண்டித்து யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் யாழ். செயலகம் முன் அடையாள மறியற் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.


மறியல் போராட்டம்...

*. அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளும் பூரணஹர்த்தாலில் ஈடுபட்டனர்.

*. இந்திய அமைதிப்படையினரால் 1989 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் படுகொலை செய்யப்பட்ட 63 அப்பாவிப் பொது மக்களது ஞாபகார்த்த நினைவுத் தூபி வல்வை தீருவில் மைதானப்பகுதியில் திரைநீக்கம் செய்து வைக்கப் பட்டது.

**03.** கிளி.மாவட்ட பட்டதாரிகளுக்கு பட்டதாரி நியமனங்கள் புறக்கணிப்பு மேற் கொள்ளப்பட்டதைக் கண்டித்து கிளி. அரச செயலகம் முன் பட்டதாரிகள் மறியற் போராட்டம்.


செயலகம்முன் மறியல்...

*.வாழைச்சேனையில் ஈ.பி.டி.பி அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட கிரனேட் தாக்குதலில் பொலிஸ் உத்தியோகத்தர்ஒருவரும், 4 ஈ.பி.டி.பி.யினரும் காயம்.

**04.** ஐ.ம.சு.முன்னணியின் தலைமைப் பதவியிலிருந்து சனா திபதி சந்திரிகா இராஜினாமா. வேலைப்பளுவே காரணமெனத் தெரிவிப்பு.

*.அமெரிக்காவின் பசுபிக் பிராந்தியக் கடற்படை அதிகாரியான லெப்பினன்ட் ஜெனரல் வலஸ்சி கிறேக்சன் யாழ். விஜயம்.

*. புதுக்குடியிருப்பில் மாபெரும் தமிழ் விழா. தமிழ்த்தாய், தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் உருவப்படங்களைத் தாங்கிய ஊர்திப்பவனியுடன் மிகவும் எழுச்சி பூர்வமான விழா கொண்டாடப்பட்டது.


மாபெரும் தமிழ்விழா...

*. முல்லை மாவட்ட பட்டதாரிகள் பட்டதாரி நியமனத்தில் திட்டமிட்ட முறை யில் புறக்கணிக்கப்பட்டதைக் கண்டித்து பட்டதாரிகள் அரச செயலகம் முன் மறியல்.


முல்லையிலும் போராட்டம்...

*. இரணைமடுச் சந்திக்கருகாமையாக ஏ-9 நெடுஞ்சாலையில் இடம் பெற்ற வீதிவிபத் தில் ஒருவர் பலி.


கோரவிபத்தில்...

*. இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் பிரிகேடியர் கபிலஹெந்த விதாரண ராஜினாமா.

**05**

*ஐ.ம.சு. முன்னணியின் தலைவர் பதவிக்கு முன்னாள் பிரதமரும் தற்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான ரட்ணசிறிவிக்கிரமநாயக்க தெரிவு.

*. இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்க கடற்படை அதிகாரியான லெப்டினன்ட் ஜெனரல் வலஸ்சிகிறேக்சன் பலாலி, காரைநகர், முகமாலை போன்ற இடங்களுக்குச் சென்று அங்குள்ள நிலைமை தொடர்பாக கலந்துரையாடினார்.

*.பாராளுமன்றத்தில் கருணா தொடர்பாக அநுரா ஆற்றிய உரைக்கு சிவாஜிலிங்கம் ஆட்சேபனை தெரிவிக்க முயன்றவேளை அவரை ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மேர்வின்சில்வா தாக்க முயற்சி.

**06**

*. விசேட 'உந்துகணை செலுத்தி' பயிற்சி நிறைவு நாள் நிகழ்வில் தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

*. இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைவு மக்களின் உடனடி மனிதாபிமானத் தேவைக்களை மேற்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டது. ஆனால் தெற்கிலுள்ள மக்களுக்குத் தவறான எண்ணத்தைத் தோற்றுவிக்க இவ்விடயத்தினை அரசியல் வாதிகள் பயன்படுத்தியுள்ளமை துரதிர்ஷ்டவசமானதென அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தம்மைச் சந்தித்த தெற்கிலுள்ள சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளுக்கு வலியுறுத்தினார்.


சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன்...

*.தமிழீழ காவல்துறையின் முன்னரங்க காவல்துறை சிறப்புத் தளபதி மற்றும் விளக்குவைத்தகுளம் பகுதிப் பொறுப்பாளர் மாறன் ஆகியோர் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரைச் சந்தித்து முன்னரங்க காவலரண் தொடர்பாக கலந்துரையாடினர்.

*. வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு தம்மை உடனடியாக அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு கோரி கிருஷாந்தி கொலை வழக்கு மரணதண்டனைக் கைதியான லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

**07.** ஜேர்மனியில் தமிழ் மொழி வளர்ச்சிக்காக அரும்பணியாற்றி வரும் இரா.நாகலிங்கம் அவர்களைத் தமிழீழ தேசியத்தலைவர் அவர்கள் விருது வழங்கிக் கௌரவித்தார்.

*. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூர் விஜயம்.

* சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வன்னி வதிவிடப்பிரதிநிதிகளுக்கும், தமிழீழ காவல்துறை முக்கியஸ்தர்களுக்கு மிடையே சந்திப்பு.

*. திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தலைமையிலான போராளிகள் மூதூர் கட்டை பறிச்சான் இராணுவ முகாம் சோதனைச் சாவடியில் தடுத்து வைக்கப்பட்டு இரண்டு மணித்தியாலயத்தின் பின்னர் தொடர்ந்து பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

**08** * வன்னித் தொழில்நுட்ப நிறுவனத்தின் முதலாவது பட்டமளிப்பு நிகழ்வு.



பட்டமளிப்பு நிகழ்வில்...

# சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சமூக நலப் பயிற்சி நெறி

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து சுகாதாரத்திணைக்களத்தினூடாக ஏ.எஸ்.பி.நிறுவனத்தின் நிதி உதவியில் நடாத்தப்படும் சமூக நலப்பயிற்சி நெறியின் 2ஆம் கட்ட பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு நடாத்தும் அடிப்படையில் கடந்த 07,ஆம் 08ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் பிரதேசத்தில், கிளி/அக்கராயன் அ.த.க. பாடசாலை, கோணா வில், கிளி/வன்னேரி மகாவித்தியாலயம் ஆகியவற்றில் சிறப்பாக நடாத்தப்பெற்றது.

இப்பயிற்சி நெறியில் ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் 50இற்கு மேற்பட்ட மாண வர்களும், பாடசாலை ஆசிரியர்களும், அதிபர்களும் கலந்து கொண்டனர். மேலும் இப்பயிற்சி நெறியில் முதலுதவி, உடல் அமைப்புத் தொழிற்பாடு, முதலுதவிச் செய்முறைகள் , தொற்றுநோய்கள், சுகா தார நடைமுறைகள் தொடர்பாக பல விரிவுரைகள் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவு ஆணையாளர், திட்டஇணைப்பாளர், தலைவர், தொண்டர்கள் ஆகியோராலும் சுகாதாரத் திணைக்களப் பிரதிநிதிகளாலும் வழங்கப்பட்டன இப்பயிற்சி நெறியில் ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் முதலுதவி தொடர்பான கைநூல் மற்றும் முதலுதவிப் பெட்டிகள் என்பன வழங்கப்ப்ட்டன.

# மாவட்ட வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்ட எக்ஸ்கதிர் சிகிச்சைப்பிரிவு மூடப்பட்டது!

## தொழில்நுட்பவியலாளர் இன்மையால் அவலம்

களுவாஞ்சிக்குடி மாவட்ட வைத்தியசாலையில் அண்மையில் திறக்கப்பட்ட எக்ஸ்கதிர் சிகிச்சைப் பிரிவு தற்போது மூடப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளுக்கு முன் தருவிக்கப்பட்ட இவ் இயந்திரம் கடந்த சில மாதங்களுக்கு முன் பொருத்தப்பட்டது. தற்போது இதற்கான தொழில் நுட்பவியலாளர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதால் களுவாஞ்சிகுடி மாவட்டவைத்தியசாலையில் உள்ள எக்ஸ் கதிர் சிகிச்சைப் பிரிவானது தற்போது மூடப்பட்டுள்ளது. இவ் இயந்திரம் துருப்பிடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மாவட்டவைத்திய அதிகாரி கே.வசிகரன் தெரிவித்தார்.

இவ் வைத்தியசாலையில் எக்ஸ்கதிர் சிகிச்சை தேவைகளை நிறைவேற்றுவதற்காக இப்பகுதி மக்கள் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கும் மட்டக்களப்பு ஆதார வைத்தியசாலைக்கும் போக வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்-

# ஆதவனின் அனுபவப் பகிர்வுகள்

என் அன்பு வாசகர்களே,

ஒரு மாபெரும் வல்லரசு சின்னாபின்னப்பட்டு வீழ்ச்சியடைந்தது கடந்த நூற்றாண்டின் இறுதியில் ஆம்,சோவியத் யூனியனின் வீழ்ச்சிதான் அது.

சோவியத் யூனியன் மிகப்பெரிய நிலப்பரப்பைக் கொண்டிருந்தது. 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்ற கோஷத்துடன் ஒக்ரோபர் புரட்சியை நடத்தி வெற்றிகண்ட சோவியத்ரஷ்யா தனது பலத்தை உலகெங்கும் பரப்பி எல்லாத் துறைகளிலும் வெற்றிக்கொடி நாட்டியது.

14 வருடங்களுக்கு முன்னர், நான் கண்டகனவு நிறைவேறியது. சின்ன வயதிலிருந்தே பொதுவுடமைத் தத்துவத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தேன் நான். அப்போதெல்லாம் எப்படியாவது ஒரு தடவையாவது சோவியத் ரஷ்யாவைப் பார்த்துவிடவேண்டும் என்ற ஆர்வம் மனதில் நெருடிக்கொண்டேயிருந்தது.

அந்தக்கனவு நிறைவேறப் போகிறது என்ற பரபரப்பில் உலகத்தில் அக்காலத்தில் புகழ்பெற்ற "AEROFLET" என்கின்ற ரஷ்சிய விமானத்தில் ஏறினேன். லெனினைப் பார்த்து விட வேண்டும் என்ற துடிப்பு மனதில் இருந்தது. லெனினின் உடலைப் பழுதாகாமல் இன்னமும் கண்ணாடிப்பெட்டியில் வைத்திருக்கிறார்களாம் என்ற செய்தியை நான் கேள்விப்பட்டிருந்தேன்.

1990ஆம் ஆண்டு நான் மொஸ்கோ பயணத்தை ஆரம்பித்தேன். அந்த விமானம் மிகப்பெரியதாயிருந்தது. குலுக்கலும் கூடவாக இருந்தது. 1990ஆம் ஆண்டில் சோவியத் யூனியன் பொருளாதாரத்தில் சரியத் தொடங்கியிருந்த காலம். அதன் பொருளாதாரச் சரிவு அந்த விமானத்திலும் தெரிந்தது.

அமெரிக்காவின் ஊடுருவல் அதிகமாகியிருந்தகாலம் அது. கலாசாரச் சீரழிவுகளும் உலகின் மிகப்பெரிய போதைவஸ்துக் கடத்தல் மன்னர்களும் சோவியத் யூனியனுக்குள் நுழைந்து உள்ளாலே சோவியத்தை அரித்துக்கொண்டிருந்த காலம் அது.

சோவியத் ரஷ்யாவின் தலைநகரம் மொஸ்கோவில் விமானம் இறங்கியது. என்மேனி ஒருதடவை புல்லரித்தது.

தொழிலாளரின் நாடு, பொதுவுடமைத் தத்துவத்தின் தாய்நாடு, முதலாளித்துவத்தை புரட்சியினால் வெற்றிகொண்ட நாடு மார்க்ஸிம் கோர்க்கி' 'புஸ்கின்' 'டால்ஸ்டாய்' 'அன்ரன் செக்கோவ்' 'தஸ்தோஸ்கி' 'தித்தோவ்' போன்ற மாபெரும் எழுத்தாளர்கள் தமது ஒப்பற்ற படைப்புகளினால் உலக இலக்கியத்தைச் செழுமைப்படுத்திய நாடு.

என் இலக்கியக் கண்களில் புதிய ஒளியைப் பாய்ச்சிய நாடு, அடக்கப்படுகிற சுரண்டப்படுகிற கோடானு கோடி மக்களுக்கு ஆதர்சமாய் விளங்கும் நாடு.

அந்த நாட்டில் நான் நிற்கிறேன். என் கனவு பலித்துவிட்டது.

ஆம் நான் மொஸ்கோவில் நிற்கிறேன். ஆனால்...ஆனால்...

நாழிகைகளும் கணங்களும் கழிந்து கொண்டு போகப்போக... என் கனவிலும் மண்விழத் தொடங்கியது.

ஒரு'ஹோட்டலில்' ரூம் எடுத்துத் தங்கினேன். தங்கிய முதல் நாளே எனக்கு ஏமாற்றங்கள் காத்திருந்தன. எந்த ஒரு நாட்டில் இலஞ்சம்,ஊழல் இல்லையென நினைத்தேனோ அதே நாட்டில் இலஞ்சமும் ஒழுக்கச் சீர்கேடுகளும் மலிந்து கிடந்தன. வறுமை தாண்டவமாடியது. எந்த நாட்டிற்குள் அந்நியப் பணம் வரக்கூடாது என்று உறுதியாக ஆட்சி புரிந்து வெற்றி காணப்பட்டதோ அதே நாட்டிற்குள் ஒருடொலர் தாளுக்காக தொழிலாளர்கள், உத்தியோகத்தர்கள் நாயாய், பேயாய் அலைவதைப் பொறுக்க முடியாமல் இருந்தது எனக்கு.

இலஞ்சம் கொடுக்காமல் எதையுமே இலகுவில் செய்ய முடியாமலிருந்தது. அன்றிரவு எப்படியோ மனதின் வேதனைகளை அடக்கிக்கொண்டுதூங்கி விட்டேன்.

அடுத்த நாள் காலை சோவியத் ரஷ்யாவின் புகழ்பெற்ற பாராளுமன்றமாகிய 'கிரம்ளின்' ஐப் பார்ப்பதென்று உத்தேசித்து முன் கூட்டியே ஹோட்டல் முகாமையாருடன் கதைத்து அவருக்கு வேறு சிறிது இலஞ்சங் கொடுத்து முதல் 'பஸ்' சில் ஒரு இடத்தை 'புக்' பண்ணியிருந்தேன்.

காலை விடிந்தது. காலைச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு ஹோட்டல் வாசலில் போய் எனது பஸ்சிற்காகக் காத்திருந்தேன். என்னுடன் ஏகப்பட்ட சுற்றுலாப் பயணிகள் காத்திருந்தனர். ஒருபஸ் வந்தது. பஸ் நின்றதுதான் தாமதம் எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு பஸ்சினுள் ஏறினார்கள். அங்கே எந்தவொரு ஒழுங்கும் இருக்கவில்லை.

நான் பதிவு செய்யப்பட்ட எனது அட்டையைக் கையில் வைத்துக் கொண்டு சாரதியிடம் அதைக் காட்டினேன். சாரதி அதைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. அவனுக்கு ஆங்கிலம் தெரியாது. பஸ்சோ நிறைந்து விட்டது. சாரதி பஸ்சை 'ஸ்ராட்' பண்ணி விட்டான்.

நான் "heyI have booked the ticket (நான் பதிவு செய்து விட்டேன்)" என்று பலமாகக் கத்தினேன். ஒரு பலனும் இல்லை. யாருமே சட்டை செய்யவில்லை. பஸ் போய்விட்டது.பனி வேறு பெய்ய ஆரம்பித்து விட்டது. நான் அநாதரவாய் விடப்பட்டேன்.

திரும்பி ஹோட்டலின் உள்ளே போய் எனக்குப் பதிவு செய்த முகாமையாளரைக் கேட்போம் என நினைத்து உள்ளே போனேன். அங்கு அவன் இல்லை அவனுக்குப் பதில் இன்னொருவன் நின்றான். அவனிடம் எனது அட்டையைக் காட்டினேன். அவன் அதைவாங்கி மேலும் கீழும் பார்த்தான். பார்த்துவிட்டுச் சிரித்தான். சிரித்து விட்டுச் சொன்னான்.

"நீ ஏமாற்றப்பட்டுவிட்டாய் இங்கு அப்படி ஒரு சிஷ்ரம் இல்லை. பஸ்வரும் முந்தினவன் முந்தினவன்தான்" என்று

எனக்கு தூக்கிவாரிப் போட்டது. பொதுவுடமை நாட்டின் தலைநகரிலா இப்படி இலஞ்சமும் ஏமாற்றும்.....?

"What can I do now (இப்போ நான் என்ன செய்வது)" என்று கேட்டேன்.

"வருகிற பஸ் ஏதாவது ஒன்றில் ஏறிப்போ" என்று மிகச்சாதாரணமாகச் சொல்லிவிட்டு அந்தக்கண்ணாடியன்னலையும் சாத்தி விட்டுப்போய்விட்டான்.

அடப் பாவிகளா...?

நான் எரிச்சலுடன் வெளியே வந்தேன். வெளியே இரண்டாவது பஸ் வந்து நின்று முதலாவது போலவே ஆட்கள் நெருக்கியடித்துக் கொண்டிருக்க தன்னை நிறைத்துக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் அதுவும் போய்விட்டது.என்ன செய்வதென்றே புரியவில்லை. ஒருவரும் ஆங்கிலம் கூடப் பேசமாட்டார்களாம் ரஷ்ய மொழியே எங்கும் இரைந்து கொண்டிருந்தது.

நான் திகைத்துத் திண்டாடிக் கொண்டிருந்தேன். அப்போது அந்தக் 'ஹோட்டல்' காவலாளி தனது சீருடையுடனும் AK 47 துப்பாக்கியுடனும் அங்கும் இங்குமாய் நடந்து கொண்டிருந்தான்.

இரண்டாம் உலகப்போரில் ஜேர்மனிய நாசிப் படைகளை ஓடஓட விரட்டியடித்த ருஷ்யப் போர் வீரர்களைப் பற்றியும், அவர்களின் வீரஞ்செறிந்த போராட்டம் பற்றியும் நான் புத்தகங்களில் படித்திருக்கிறேன், அவர்களது சீருடைகளைக் கூட நான் படங்

## பகுதி-08

களில்பார்த்து வியந்ததுண்டு.அதே போன்ற சீருடையில் அந்தக் காவலாளியும் ஒரு மிடுக்குடனும் நிமிர்ந்த நெஞ்சுடனும் நடந்து கொண்டிருந்தான். ஏனோ எனக்கு அவனில் ஒரு ஈடுபாடு உண்டாகத் தொடங்கியது.அவனிடம் உதவிகேட்டால் அவன் நிச்சயம் செய்வான் என்றஎண்ணம் எனக்கு வந்தது.

அவனை நோக்கிப் போனேன். கிட்டப் போய்

"Excuseme" என்றேன் .

அவன் என்னை மேலும் கீழும் பார்த்தான், நான் எனது அட்டையைக்காட்டி பஸ்சில் போக வேண்டும் என்று கூறினேன். அவன் அப்போதும் என்னை மேலும் கீழும் பார்த்தான். நான் மீண்டும் என் விஷயத்தைக் கூறினேன். அவனுக்கும் ஆங்கிலம் தெரியாது என்பதை நான் பின்னர் பிந்தித்தான் புரிந்து கொண்டேன்.

அவன் திடீரென என்னை மிகவும் நெருங்கி நேரே வந்தான். ஒரு மூன்று அடி இடைவெளிவரை வந்து விட்டான். அவன் தன் பெரிய முழிக்கண்களினால் என்னைத் துளாவி எடுத்தான் .எனக்கு ஒன்றுமே புரியவில்லை. திடீரென்று தன் துப்பாக்கியை என் நெஞ்சுக்கு நேரே நீட்டினான். துப்பாக்கியின் சுடுகுழல் மிக அண்மையில் என் நெஞ்சை உரசுவது போல் இருந்தது.....

(அடுத்த வாரம் பார்ப்போம்)

# தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் 9,472 ஆசிரியர் வெற்றிடங்கள்

## — சிங்களமொழிமூலப் பாடசாலைகளில் 7895 பேர் மேலதிகம்

(திருமலை)

நாட்டிலுள்ள தமிழ்மொழிமூலப் பாடசாலைகளில் 9472 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்ற அதேவேளை சிங்களமொழி மூலப் பாடசாலைகளில் 7895 ஆசிரியர்கள் மேலதிகமாக இருக்கின்றனர்.

சிறிலங்காவில் கல்வியமைச்சு வெளியிட்ட தகவல் குறிப்பில் மேற்கண்டபுள்ளிவிபரம் வெளியாகியுள்ளது. தமிழ்மொழிமூலப் பாடசாலைகளில் பெரும்பாலும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் 3693, ஆங்கிலபாட ஆசிரியர்கள் 2936, கணித, விஞ்ஞான ஆசிரியர்கள 1491என பற்றாக்குறை நிலவுகிறது.என்றும்சிங்கள மொழிமூலப் பாடசாலைகளில் கலைப்பட்டதாரிகள் 1233, இரண்டாம் நிலைப் பாடங்களுக்கான ஆசிரி யர்கள்-5075 மேலதிகமாகக் காணப்படுகின்றனரென்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சுத்தமான குடிநீரின்றி 26,000 குடும்பங்கள் அவதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 26ஆயிரம் குடும்பங்கள் சுத்தமான குடிநீரைப்பெற முடியாத நிலையில் வாழ்ந்து வருவதாக மாவட்ட செயலக புள்ளிவிபரம் தெரிவித்துள்ளது.

அம்மாவட்டத்திலுள்ள 14 பிரதேசசெயலர் பிரிவுகளைச் சேர்ந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட ஆய்வின் போது இப்புள்ளிவிபரம் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி வெல்லாவெளி பிரதேசசெயலகர் பிரிவில் 5382 குடும்பங்களும், செங்கலடி, கோறளைப்பற்று தெற்கு பிரதேசங்களில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களும், கோறளைப்பற்று வடக்கில் 2ஆயிரம் குடும்பங்களும் மற்றும் மண்முனைவடக்கு வவுணதீவு, களுவாஞ்சிக்குடி, காத்தான்குடி, வாழைச்சேனை ஆகிய பிரிவுகளில் 2ஆயிரம்குடும்பங்களும் சுத்தமான குடிநீரின்றி அவதிப்படுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

# இரவுநேரக் கற்றலுக்கு சூரிய மின்கலம் வழங்கல்

(புதுக்குடியிருப்பு)

ஒட்டுசுட்டான் வசந்தபுரம் கிராமத்திலுள்ள மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்த சூரிய மின்கலத் தொகுதியொன்று வழங்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித்துணைப் பொறுப்பாளரினால் இந்த சூரிய மின்கலத் தொகுதி கிராம வளர்ச்சிக் குழுவிடம் வழங்கப் பட்டது.

ஜானி முன்பள்ளியில் சூரிய மின்கலத்தொகுதி இணைக்கப்பட்டு இரவுநேரக் கற்றல் செயற்பாடுகள் இடம்பெறவுள்ளன. (08)

# யுத்தத்தால் பாதிப்புற்ற பாடசாலைகளை புனரமைக்க 900 மில்.ரூபா ஒதுக்கீடு

கடந்த காலங்களில் யுத்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளைப் புனரமைக்கவென 900 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஆறு வருடங்களில் செயற்படுத்தப்படவிருக்கும் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்குத் தேவையான கட்டடங்கள்,தளபாடங்கள் மற்றும் பௌதிகவள வசதிகள் போன்றவை ஏற்படுத்திக் கொடுக்கப்படவிருக்கின்றன.

இதேவேளைஇம் மாகாணத்தில் எட்டு மாவட்டங்களினதும் கல்வி வலயங்களைச் சேர்ந்த 2002 பாடசாலைகளில் 150 பாடசாலைகள் இதுவரை மூடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

# கொலை சந்தேகநபர்கள் ஆயுதங்களுடன் கைது

(கொழும்பு)

குருந்தி வெல பகுதியில் நடைபெற்ற பல கொலைகளுடன் சம்பந்தப்பட்டவர்களென சந்தேகிக்கப்படும் மூவர் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருந்தமை தொடர்பாகவே இவர்கள் முதலில் கைது செய்யப்பட்டு அத்துறுகல மாவட்ட நீதிமன்றத்தினால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

இவர்களிடம் இரண்டு துப்பாக்கிகள், தோட்டாக்கள், கைக்குண்டு ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

# சட்ட விரோத மதுபான விற்பனை நிலையங்கள் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்ட விரோத மதுபான விற்பனை நிலையங்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது. மாவட்ட செயலகம் மேற்கொண்ட ஆய்வுகளின்படி அங்கு 439 சட்டவிரோத மதுபான நிலையங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இவற்றுள் வெல்லாவெளி பிரதேசத்தில் மட்டும் 191 சட்ட விரோத மதுச்சாலைகள் உள்ளன. கோறளைப்பற்று தெற்கில் 61 நிலையங்களும் பட்டிப் பளையில் 60 நிலையங்களும் உள்ளதாக மேற்படி ஆய்வு தெரிவிக்கின்றது.

# இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசுவதே நெருக்கடியைத் தீர்க்க ஒரே வழியாகும்

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண

**நாட்டில் பாரிய நெருக்கடி நிலையை தவிர்க்க வேண்டுமானால் இடைக்கால நிர்வாகம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டியது அவசியம் என இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.**

அரசாங்கம் இடைக்கால நிர்வாகம் குறித்து பேச்சு நடத்தாமல் போனால் அது நாட்டை பல வழிகளிலும் பாதிக்கக் கூடும். கருணாவுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலானபிரச்சினையானது தீர்க்கப்படாது போனால் தென்னிலங்கையின் இயல்பை அது பாரிய அளவில் பாதிக்கும், சமாதானம் இன்று நாட்டிற்கு அவசியமானது.அதற்கு எதிராக ஜே. வி. பி செயற்படுவதானது அதன் அரசியல் முதிர்ச்சியின்மையையே காட்டுகிறது.

வடக்கு- கிழக்கு மக்கள் தமது நிர்வாகத்தை நிர்ணயித்துக் கொள்வதில் எவ்வித தவறும் இல்லை. எனவேதான் தமிழர்களின் சுயநிர்ணய போராட்டத்திற்கு என்றும் தாம் ஆதரவளிப்பதாக விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இந்த கருத்துக்களை அவர் முன்வைத்தார்.(32)

# இலங்கையைப் பிரச்சினையுடன் விட்டுச்சென்ற பிரிட்டனிடம் நட்டஈடு கோரத்தீர்மானம்

## அமைச்சர் தி.மு.ஜயரட்ண கூறுகிறார்

தாம் பிரித்தானிய அரசாங்கத்திடம் நட்டஈட்டை கோரப்போவதாக மலைநாட்டு அபிவிருத்தி அமைச்சர் தி.மு ஜயரட்ண தெரிவித்துள்ளார். கண்டியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர் பிரித்தானியா இலங்கையை ஆட்சி செய்த போதும் நாட்டிற்கு சுதந்திரம் வழங்கி செல்கையில் பலவிதமான பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமலேயே சென்று விட்டது.

நாட்டின் வளங்களை பிரித்தானியர் சுரண்டினர். அதன் மூலம் தமது நாட்டை செல்வந்த நாடாக்கினர். ஆனால் தமது ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த இலங்கையை அவர்கள் உரிய முறையில் அபிவிருத்தி செய்யவில்லை.: நாட்டின் கலாசாரத்தை அழித்து விட்டனர், தோட்டத் தொழிலாளர்களாக இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட தமிழர்களுக்கு உரிய வாழ்க்கையை அவாகள் பெற்றுக்கொடுக்கவில்லை.

அதேநேரம் இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற இனப்பிரச்சினையைக் கூட அவர்கள் உரிய வழியில் கையாளாததன் காரணமாகவே இன்று நாடு பாதாளத்தில் நின்று கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார் . எனவே தாம் பிரித்தானிய அரசாங்கத்திடம் நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யப்போவதாகவும் அவர் குறிப்பிட்டார். (32)

# ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோர் பல்கலைக் கழகம் செல்லத் தகுதி

(கொழும்பு)

இம்முறை கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய சுமார் இரண்டு இலட்சம் பேரில் ஒரு இலட்சத்து எண்ணாயிரத்து முந்நூற்று ஐம்பத்தேழு பேர் பல்கலைக்கழகம் செல்ல தகுதி பெற்றுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சையில் .இரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பது பேர் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஒரு இலட்சத்து பதினேழாயிரத்து எழுபத்தைந்து பேர் மூன்று பாடங்களிலும் சித்தி பெற்றுள்ளதாகவும் பரீட்சை ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சையில் பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளில் பத்தொன்பதாயிரத்து தொழாயிரத்துத் தொண்ணூறு பேர் மூன்று பாடங்களிலும் சித்தியடையவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஐம்பது சதவீத ரயில் பெட்டிகள் மக்கள் பாவனைக்கு பொருத்தமற்றவை

## -ரயில்வே திணைக்களம் தகவல்

(கொழும்பு)

நாட்டில் அனைத்துப் பகுதிகளுக்கும் செல்லும் ரயில்களில் ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமான ரயில் பெட்டிகள் மக்களின் பாவனைக்குப் பொருத்தமற்றதாக இருப்பதாக ரயில்வேத் திணைக்களப் பொதுமுகாமையாளர் பிரியால்த சில்வா தெரிவித்தார்.

தற்போது நாட்டில் 450 ரயில் பெட்டிகள் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாகவும் இதில் 200 ரயில் பெட்டிகளின் தரம் மிகவும் மோசமாகவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ரயில் திணைக்களத்திற்குச் சொந்தமான 700 ரயில் பெட்டிகளில் 250 ரயில் பெட்டிகள் திருத்த வேலைகளுக்காகத் தற்போது இரத்மலானையிலுள்ள ரயில் வேலைத்தளத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவை இன்னும் வந்துசேராத காரணத்தினால் இந்நிலைமை ஏற்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ரயில் சேவைகளை வழமையாக நடத்தவேண்டியிருப்பதால் சேதமடைந்துள்ள 200 பெட்டிகள் சேவையில் இணைக்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் ரயில் பெட்டிகளின் குறைபாட்டினால் ரயில் போக்குவரத்தில் நேரங்களைக் கட்டுப்படுத்த வேண்டியநிலையேற்பட்டுள்ளதாகவும் முகாமையாளர் தெரிவித்தார்.

ரயில் பெட்டிகளுக்கான குறைபாடுகள் சுமார் 15 வருடகாலமாக நிலவிவருவதாகவும், இக்குறைபாடுகளை நீக்க சீனாவிலிருந்து 100 ரயில் பெட்டிகள் தருவிக்கப்படவிருந்தபோதிலும் அது சாத்தியமற்றுப் போனதாகவும், இதனால் அதிகரித்துவரும் ரயில் பயணிகளுக்குரிய சேவைகளைச் சரியான முறையில் வழங்க முடியாதிருப்பதாகவும் அவர்மேலும் தெரிவித்தார்.

# இன்றைய ஜே.வி.பி. உறுப்பினர்கள் வெள்ளத்தில் அடித்துவரப்பட்டு ஒதுங்கியோர்

## -மஹிந்த விஜயசேகர கூறுகிறார்

தானே ஜே.வி.பி.யை உருவாக்கியவர் எனக் கூறும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த விஜயசேகர இன்றுள்ள ஜே.வி.பி.யினர் வெள்ளத்தில் இழுத்து வரப்பட்டு ஒதுங்கியவர்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துரைத்த அவர் இன்று அரசாங்கச் சொத்துக்களை பாதுகாக்கப் பாடுபடும் ஜே.வி.பியினரே 1988 ஆம்ஆண்டு காலப்பகுதியில் அரசாங்கச் சொத்துக்களை அழித்ததாகவும் குறிப்பிட்டார். இங்கு கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க வெளிநாட்டு உதவியைப் பெற்றால் அந்த நாடுகளுக்கு கொத்தடிமைகளாகி விடுவோம் என ஜே.வி.பி. கூறுவதானது அந்தக்கட்சியின் தலைவரையே சுட்டிக்காட்டுவதாக உள்ளது எனக் குறிப்பிட்டார். அவர் வெளிநாட்டில் பிரஜாவுரிமை பெற்றிருப்பதால் அவரும் கொத்தடிமையா? என்பதை ஜே.வி.பி. விளக்க வேண்டும் எனவும் எஸ்.பி. திஸாநாயக்க கேட்டுக் கொண்டார். (32)

# புளொட் மோகன் கொலை தொடர்பில் 60 இற்கு மேற்பட்டோரிடம் விசாரணை

(கொழும்பு

பம்பலப்பிட்டி விஜிர வீதிச்சந்தியில் கடந்த 31 ஆம் திகதி இடம் பெற்ற 'புளொட்' மோகனின் கொலை தொடர்பாக இதுவரை அறுபதிற்கும் மேற்பட்டோர் பொலிசாரினால் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொலைச் சந்தேக நபர் தங்கியிருந்ததாகக் கூறப்படும் விடுதியின் உரிமையாளர், சந்தேக நபர் பயணம் செய்த ஆட்டோவின் உரிமையாளர் உட்பட மேற்படி தொகையினர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டனர் என பம்பலப்பிட்டி பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# நீதிபதிகளை பாதுகாக்க விசேட நடவடிக்கை!

(கொழும்பு)

அண்மையில் உயர்நீதிமன்ற பெண் நீதிபதியொருவரின் மீது பாலியல் பலாத்கார முயற்சி மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து நீதிபதிகளைப் பாதுகாக்க விசேட திட்டமொன்றை சிறிலங்காவின் நீதியமைச்சர் ஜோன்செனவிரத்ன ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது விடயம் தொடர்பாக அமைச்சர்,சனாதிபதி, பொலிஸ்மா அதிபர் மற்றும் நீதிச்சேவைகள் ஆணைக்குழு செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடல்களை நடாத்தியுள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் தொடர்ச்சியான பொலிஸ் ரோந்து மற்றும் நீதிபதிகளின் வீடுகளில் 'வீடியோ' கமெராக்கள் பொருத்துதல் என்பன அடங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.


உடனடி வேலை வாய்ப்பு

இதோ! கவலையே வேண்டாம்

டோகா கட்டார்

- 30 நாட்களுக்குள் பயணம்
- தொழில் – மேசன்
- சம்பளம் –20,000 ரூபாவுக்கு மேல்
- வேலை நேரம் – 08 மணித்தியாலம்
- மேலதிக நேரக் கொடுப்பனவு உண்டு.(over time)

பயணச் செலவில் அரைவாசித் தொகைக்கு கடன் வசதி செய்து தரப்படும்.

உங்கள் தொடர்புகளுக்கு-
A.A. மைக்கல்
தொலைபேசி-0777.279813

(சி.9960)



பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியிற் கீழ்க்குறிப்பிடப்படும் பணிநிலைக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

✡ பணிநிலை:- கணினித்தரவு பதியுநர்

✡ தகைமை:-

01. எம்.எஸ்.ஒபீஸ் கற்கை நெறி முழுமை செய்திருத்தல் வேண்டும்.

02. க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்:- $\frac{3300 - 4300}{10 \times 100} + 2000$

தகுதியுடையவர்கள் 2004.08.20 ஆம் நாள் காலை 10.00 மணிக்கு நடுவப்பணியகம், ஆயப்பகுதி, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு கீழ்க் குறிப்பிடப்படும் சான்றிதழ்களுடன் வருகை தரவும்.

1. தன்வரலாற்றுச் சான்றிதழ்
2. கல்வித் தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்.
3. ஏனைய தகைமைகளையும் பட்டறிவையும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்.

மனிதவளமேலாளர்,
ஆயப்பகுதி,
நிதித்துறை.

(சி-9777)

# வைகோ உள்ளிட்ட 9 பேர் மீதான பொடோ வழக்கை

# தமிழக அரசு திடீரென நேற்று முன்தினம் வாபஸ் பெற்றது

(சென்னை)

**ம.தி.மு.க .பொது செயலர் வைகோ உள்ளிட்ட 9 பேர் மீது தொடரப்பட்ட பொடோ வழக்கை தமிழகஅரசு திடீரென்று நேற்று முன்தினம் வாபஸ் பெற்றுள்ளது.**

பூந்த மல்லி பொடோ நீதி மன்றத்தில் தமிழக அரசின் வழக்கறிஞர் ஜெயக்குமார் நேற்று முன்தினம் தாக்கல் செய்த மனுவில் வைகோ உள்ளிட்ட 9பேர் மீதான பொடோ வழக்கை வாபஸ் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2002 இல் மதுரையை அடுத்த திருமங்கலத்தில் நடந்த கூட்டத்தில் வைகோ தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதாகக் கூறிவைகோ உட்பட மதிமுகவினர் 9பேர் கைது செய்யப்பட்டனர். பின்னர் பொடோ வழக்கு இவர்கள் மீதுபதிவு செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

பொடோ வழக்குத் தொடர முதல் நோக்கு ஆதாரங்கள் ஏதுவும் இல்லை என்று கூறிய பொடோ மறுஆய்வுக்குழு இந்த வழக்கை திரும்பப்பெற வேண்டும் என்று தமிழக அரசிற்கு நான்கு மாதங்களுக்கு முன்னர் பரிந்துரைத்திருந்தது.

எனினும் நேற்று முன்தினம் தான் தமிழக அரசுவழக்கைத் திரும்பப் பெற்றுள்ளது .

இதேவேளை பொடோ வழக்கின் பிணையில் வைகோ உள்ளிட்ட 9பேரும் வெளியில் வந்தே நடந்து முடிந்த மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமிழக அரசின் வழக்கறிஞர் தாக்கல் செய்த மனுமீதான விசாரணை எதிர் வரும் 26 ஆம்திகதி பூந்த மல்லி பொடோ நிதிமன்றில் நடை பெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தீயசக்திகளின் சதித்திட்டத்தை முறியடிக்க பொலிசாருக்கு அறிவுறுத்தல்

## தமிழக முதல்வர் ஜெயலலிதா விடுத்தார்.

(சென்னை)

தமிழ் நாட்டின் அமைதியை சீர்குலைக்க முயலும் தீய சக்திகளின் சதித்திட்டத்தை முறியடிக்க வேண்டும்,பொலிஸ் உயரதிகாரிகள் மாநாட்டில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று வலியுறுத்தியுள்ளார்.

காவல்துறையினர் அலட்சியப் போக்குடன் செயற்படுவதால் பொறுத்துக்கொள்ள முடியாது என்று எச்சரித்துள்ள முதல மைச்சர்,

தமிழக அரசின் சரியான நடவடிக்கைகள் காரணமாக தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக பராமரிக்கப்படுவதாகவும், தமிழகம் அமைதி சொர்க்கமாக விளங்குவது குறித்து, உலகம் முழுவதும் பேசப்படுவதாகவும் கூறியுள்ளார்.

இந்த அமைதியைக் குலைக்கவே தீயசக்திகள் செயற்படுவதாகவும் அதன் ஒரு பகுதியே சென்னை, கோவை நகரங்களில் வெடிகுண்டுப் புரளி கிளப்பப்பட்டிருப்பதாகவும் இதனை முறியடிக்க தமிழக பொலிசார் உஷாராக இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

தமிழ் நாட்டில் தீவிரவாத அமைப்புக்கள் அனைத்தும் ஒடுக்கப்பட்டுவிட்டன. சிறப்பான கண்காணிப்புக் காரணமாக சாதிமதக் கலவரங்கள் தடுக்கப்பட்டுவிட்டன. சிறையில் மரணம் குறைந்து விட்டதாக கூறியுள்ளார்.

# இந்.பாக். பேச்சுகள் நேற்று ஆரம்பம்

(புதுடில்லி)

இந்தியா பாகிஸ்தானிடையே இஸ்லாமபாத்தில் வெளியுறவு மட்டப் பேச்சுக்கள் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

இருநாடுகளுக்கிடையே நிலுவையிலுள்ள வெவ்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைகளை நடத்துவது என்று இருநாடுகளும் இந்த ஆண்டின் தொடக்கத்தில் முடிவு செய்யதுள்ளதன் அடிப்படையில் இந்தப் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன.

1999 இல் இந்திய விமானம் கடத்தப்பட்ட சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகளைப் பாகிஸ்தானில் இருந்து. இந்தியாவுக்கு நாடு கடத்த வேண்டும்,பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு அசாத் காஷ்ரில் செயற்படும் தீவிரவாத அமைப்புக்களுக்கு நிதியுதவி கிடைப்பதைத் தடுக்க வேண்டும் போன்ற பிரச்சினைகள் உள்ளிட்டவை பற்றி இந்தியா இப்பேச்சுக்களில் கேள்வி எழுப்பவுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் இந்தியத் தரப்பில் உள்துறைச் செயலர் வீரேந்திரசிங் தலைமையில் எட்டுப் பேர் கொண்ட குழு கலந்து கொண்டுள்ளது. நேற்று ஆரம்பமாகியுள்ள இப்பேச்சுக்கள் இன்று முடிவடையவுள்ளன. என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் நீதிமன்ற வளாகத்தில் கைகலப்பு

## ஆயுதங்களுடன் வந்த இருவர் கைது

(சென்னை)

சென்னை உயர் நீதி மன்றத்தில் நேற்று வழக்கறிஞர்களிடையே ஏற்பட்ட கடும் மோதலிலும், அடிதடியிலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர். ஆயுதங்களுடன் வந்த இரண்டு வழக்கறிஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் நடத்தி வரும் காலவரையறையற்ற போராட்டத்தை வாபஸ் பெறுவது தொடர்பாகக் கருத்து வேறுபாடு ஏற்பட்டதில் வழக்கறிஞர் சங்கம் இரண்டாகப் பிளவுபட்டது.

வழக்கறிஞர் பிறேம்நாத் தலைமையிலும், வழக்கறிஞர் பிரபாகரன் தலைமையிலும் வழக்கறிஞர்கள் அணிபிரிந்து நேற்று மோதலில் ஈடுபட்டுள்ள னர். இரு தரப்பும் ஒருவரை ஒருவர் ஆயுதங்களால் தாக்கினர். இதில் இரண்டு வழக்கறிஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தினால் உயர்நீதிமன்ற வளாகம் பதற்றம்,பீதியில் காணப்படுகின்றது.

# இராணுவ ஒத்திகையில் சிப்பாய் ஒருவர் பலி

ஜம்மு காஷ்மீர் மாநிலம் ஜம்மு மாவட்டத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு நடைபெற்ற இராணுவ ஒத்திகையில் ஜவான் ஒருவர் குண்டுக்காயம் அடைந்து பலியானார். ஜம்முவில் உள்ள உமாரமார் இராணுவ முகாம் மீது இச் சம்பவம் நடந்தது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினால் அதை எப்படிச் சமாளிப்பது என்பது குறித்து இராணுவ ஒத்திகை நடந்தது. தவறுதலாகக் குண்டுக் காயம் அடைந்து ஆர்.கே.மிஸ்ரா என்ற ஜவான் உயிரிழந்தார்.

# ஈராக் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட 3 இந்தியரையும் மீட்க புதிய நடவடிக்கை

(புதுடில்லி)

ஈராக்கில் பணயக் கைதிகளாகவுள்ள இந்தியர்களை மீட்பது தொடர்பாக மத்தியரசு புதிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக குவைத் நிறுவனத்துடன் குவைத்துக்கான இந்தியத் தூதுவர் நேரடிப் பேச்சுவார்த்தைகளை நேற்று முன்தினம் நடத்தியுள்ளார்.

ஈராக்கில் இந்தியர்கள் மூவர் உட்பட ஏழு பேரை தீவிரவாதிகள் கடத்திச் சென்று 20 நாட்கள் கடந்து விட்டன.

ஏற்கனவே தீவிரவாதிகளின் நிபந்தனைகள் அனைத்தையும் குவைத் நிறுவனம் ஏற்றுக்கொண்டதாக அறிவித்துவிட்டன.

இதனையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை பணயக் கைதிகளை விடுதலை செய்வதாகக் கூறிய தீவிரவாதிகள் திடீரென்று கூடுதல் பணம் வேண்டும் எனும் புதிய நிபந்தனைகளை விதித்ததையடுத்து பணயக் கைதிகளை மீட்பதில் புதிதாக சிக்கல்கள் உருவாகியிருந்த[illegible]

இதனையடுத்து ஈராக்கில் தீவிரவாதிகளிடம் பணயக் கைதிகளாகவுள்ள மூன்று இந்தியர்களை மீட்பது தொடர்பாக, புதுடில்லியில் நேற்று முன்தினம் வெளியுறவுத்துறை இணையமைச்சர் அகமத் தலைமையில் அவசரக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

பணயக் கைதிகளை மீட்பதில் ஏற்பட்டுள்ள புதிய சிக்கல்கள் குறித்து சுமார் 4 மணிநேரம் இந்தக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

இதன்பின்னரே மத்தியரசு பணயக் கைதிகளை மீட்க புதிய நடவடிக்கை எடுத்துள்ளது குறித்து அறிவித்துள்ளது.

இதேவேளை ஈராக்கில் பணயக் கைதிகளாக பிடித்து வைத்துள்ள மூன்று இந்தியர்கள் உட்பட ஏழு பேரை மீட்பதற்கு, தீவிரவாதிகளுடன் நேரடியாகத் தாம் பேச்சுவார்த்தையை நடத்த விரும்புவதாக குவைத் நிறுவனம் அறிவித்துள்ளது.

அத்துடன் தீவிரவாதிகளுடன் பேச்சுக்கள் நடத்தும் ஷேக்அல் தொலமியை மாற்ற வேண்டும் என்றும் குவைத் செய்திகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை முன்னர் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகிக் கொள்வதாக குவைத் நிறுவனம் அறிவித்திருந்தமையையும் குறிப்பிடத்தக்கது.



பாகிஸ்தானால் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்ட இரண்டு இந்திய இராணுவ வீரர்கள் தத்தமது குடும்பத்தினருடன் இணைந்து கொள்கின்றனர்.

# கச்சதீவு அருகே இந்தியமீனவர் சிறி.கடற்படையால் சுட்டுக்கொலை

(சென்னை )

கச்சதீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இதில் மீனவர் ஒருவர் கொலலப்பட்டுள்ளார்.

மீனவர்கள் சென்ற படகும் சேதமாக்கப்பட்டுள்ளது. மூன்று மீனவர்கள் காயங்களுடன் இராமேஸ்வரம் வந்துசேர்ந்துள்ளனர்.

உயிரிழந்த மீனவரது உடல் இராமேஸ்வரம் கொண்டு வரப்பட்டதையடுத்து அங்கு பதற்றம் நிலவுகிறது. இராமேஸ்வரத்தில் இருந்து வழக்கம் போல் நேற்று முன்தினம் 350 இற்கும் மேற்பட்ட மீன்பிடிப்படகுகள் மீன்பிடிக்கச் சென்றுள்ளன. நேற்றுமுன்தினம் நள்ளிரவு கச்சதீவு அருகே இந்தியக் கடல் எல்லையில் இவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். முதலில் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்ட இலங்கைக் கடற்படையினர் மீனவர்களைநோக்கியும் சரமாரியாக சுட்டுள்ளனர். இதில் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த இராமு எனும் மீனவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார். சுமார் ஓராண்டு இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற சம்பவம் குறித்து இராமேஸ்வரம் பொலிசார் வழக்குப்பதிவு செய்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# மாநிலங்களவைக்கு அமைச்சர் சய்யீத் போட்டியின்றித் தேர்வு

தில்லி சட்டப்பேரவையில் இருந்து மாநிலங்களவைக்கு திங்கட்கிழமை நடைபெற்ற தேர்தலில் மத்திய எரிசக்தித் துறை அமைச்சர் பி.எம் சய்யீத் மற்றும் ஜனார்த்தன் திவேதி ஆகியோர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

அவர்கள் இருவரும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்டனர். லட்சத்தீவு மக்களவைத் தொகுதியில் தொடர்ந்து 10 முறை வெற்றி பெற்று வந்த சய்யீத், கடந்த மக்களவைத் தேர்தலில் தோல்வி அடைந்தார். ஆனால், அவருக்கு மத்திய அமைச்சர் பதவி அளிக்கப்பட்டது. ஜனார்த்தன் திவேதி காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளர் அம்பிகாசோனி, ஏ.ஆ,ர் கித்வாய் ஆகியோர் தங்களது மாநிலங்களவை உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்ததால் இத் தேர்தல் நடைபெற்றது. இதில் சய்யீத்,திவேதி ஆகிய இவர் மட்டுமே போட்டியிட்டதால் அவர்கள் போட்டியின்றி தெரிவு செய்யபட்டனர்.

# உத்தரப்பிரதேசத்தில் தடையை மீறிய சிவசேனை தொண்டர்கள் 250 பேர் கைது

உத்தரப்பிரதேசத்தில் வாரணாசியில் தடையை மீறி காசி விசுவநாதர் கோயிலுக்கு ஜலஅபிஷேகம் செய்வதற்காகச் சென்ற சிவசேனையைச் சேர்ந்த 250 தொண்டர்களைத் திங்கட்கிழமை பொலிசார் கைது செய்தனர்.

வாரணாசியில் ஞானவாபி மசூதி அருகே அமைந்துள்ளது. காசி விசுவநாதர், சிருங்கார கௌரி கோயில் திங்கட் கிழமையான நேற்று முன்தினம் ஊர்வலமாகச் சென்று அந்தக் கோயி லில் ஜல அபிஷேகம் செய்ய மாவட்ட சிவசேனை தொண்டர்கள் அறிவித்திருந்தனர். ஊர்வலமாகச் செல்லவும், கூட்டமாக ஜல அபிஷேகம் செய்யப் போவதாக நிர்வாகம் தடை விதித்தது. பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.தடையை மீறிய சிவசேனைத் தொண்டர்களை பொலிசார் கைது செய்தனர். இதனிடையே கோயிலில் பக்தர்கள் தனித்தனியாகச் சென்று ஜல அபிஷேகம் செய்வது தடையின்றி நடைபெற்றது என்றும் அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.



# எதிர்காலத்தில் பயிற்சியாளராவதில் ஆர்வமாகவுள்ளேன் - கங்குலி

கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவது போன்று எதிர்காலத்தில் பயிற்றுவிப்புத்துறையில் வருவதற்கு அதிக ஆர்வம் இருப்பதாக இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் செளரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

நல்லதொரு இந்திய அணி தனக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும், அதை நல்லமுறையில் கொண்டு செல்வதாகவும் தெரிவித்துள்ள கங்குலி, தனக்கு பிடித்தவர்களாக ராகுல் ராவிட், சச்சின் டெண்டுல்கர், பிரையன் லாறா, ஸ்ரீவ்வோ ஆகியோரைக் குறிப்பிட்டுள்ளார். அதேபோன்று அணியின் இளைய வீரர்களான வீரேந்தர் சேவாக், சகீர்ஹான், வி.வி.எஸ். லக்ஸ்மன், யுவராஜ்சிங், ஹர்பஜன்சிங், அனில் கும்ளே ஆகியோரையும் குறிப்பிட்டுள்ளார். இது இவ்வாறிருக்க, ராவிட், கங்குலி, சச்சின் ஆகிய மூவருக்கும் இடையில் உட்பூசல் நிலவி வருவதாக கிரிக்கெட் விற்பன்னர்கள் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நெதர்லாந்தில் நடைபெறும் கிரிக்கெட் தொடரை கைப்பற்றுவோம்

## இன்சமாம்



நெதர்லாந்தில் அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டியில் நாங்கள் நிச்சயமாக வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை இருப்பதாக பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இங்கிலாந்தில் நடைபெறவுள்ள ஐ.சி.சி மினி உலகக் கிண்ணப் போட்டியை மிக இலகுவாக எடுத்துக்கொள்ள மாட்டோம் எனவும் தெரிவித்துள்ளார். மிக இலகுவாக வெற்றி பெறுவதற்கான சந்தர்ப்பம் இருப்பதாக தெரிவித்திருந்த போதும் ஆசியக் கிண்ணபோட்டியில் தோல்வி அடைந்தமை இந்நிலையில் மாற்றத்தை இன்சமாமுக்கு ஏற்படுத்தியுள்ளது.

# தொடரைத் தீர்மானிக்கும் டெஸ்ட் போட்டி; தென்னாபிரிக்க அணியில் ஹர்ஷல் கிப்ஸ்

## இன்று எஸ் எஸ். சி. மைதானத்தில் ஆரம்பம்

சிறிலங்கா-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் இன்று கொழும்பு எஸ். எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமாகவுள்ள இறுதியும், போட்டித்தொடரை தீர்மானிப்பதுமான 2ஆவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க வீரர் ஹர்ஷல் கிப்ஸ் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்குவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கணுக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக இவர் முதலாவது போட்டியில் பங்கேற்க முடியாமல் போனது. இவரின் உடல்நிலை தற்போது தேறியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவரைப் பரிசோதனை செய்தபோது எதுவித வருத்தத்தையும் கிப்ஸ் உணரவில்லை என அவரை சோதனையிட்ட ஷேன் ஜப்பார் தெரிவித்துள்ளார்.

இவரின் வருகை தனக்கு நம்பிக்கையூட்டுவதாகவும், தொடரின் வெற்றி கிடைத்துவிட்டதாக உணர்வதாகவும் பயிற்சியாளர் எரிக் சைமன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மைதானம் பௌன்ஸர்களுக்கு பெயர் பெற்றதால் தென்னாபிரிக்க பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமாயிருக்கும் எனவும் அணித்தலைவர் கிறேம் ஸ்மித்துடன் இணைந்து கிப்ஸ் விளையாடும் அனுபவம் சிறப்பாயிருக்கும் எனவும் எரிக் சைமன்ஸ் தெரிவித்துள்ளார்.1993ஆம் ஆண்டு தென்னாபிரிக்கா ஒரு இனிங்ஸ் 208 ஓட்டங்களினால் சிறிலங்காவை வெற்றி பெற்றமையும், 2000ஆம் ஆண்டு தொடரை சமன் செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சிறிலங்கா கிரிக்கெட் அணியில் மீண்டும் தில்காரபெர்னாண்டோ



அடுத்த மாதம் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள I.C.C மினி உலகக் கிண்ண போட்டிகளில் பங்கேற்கும் சிறிலங்கா அணியில் திலின் கன்டம்பிக்குப் பதிலாக வேகப்பந்து வீச்சாளரான தில்கார பெர்னாண்டோ இணைக்கப்பட்டுள்ளார்.

அண்மைக் காலமாக காயம் காரணமாக அணியில் இடம்பெற முடியாதிருந்த பெர்னாண்டோ மினி உலகக் கிண்ணப் போட்டியில் அணிக்கு பந்து வீச்சுப் பலத்தை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதால் மீண்டும் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

# சீனா அனுப்பும் 407வீரர்களில் 84 பேருக்கு இது 4ஆவது ஒலிம்பிக்

தொடர்ந்து நான்காவது ஒலிம்பிக்கில் பங்கேற்கும் 84 வீரர்கள் உட்பட 637 பேர் கொண்ட மிகப்பெரிய குழுவை எதென்சுக்கு அனுப்புகிறது. சீனா.இதில் 267 பேர் கொண்ட முதல் குழு பூஜிங்கில் இருந்து ஞாயிற்றுக்கிழமை புறப்பட்டது. எதென்சில் குறைந்த பட்சம் 20 தங்கப்பதக்கங்களை வெல்லும் நம்பிக்கை யில் உள்ளது சீனா. 240 வீரர்கள், 27 அதிகாரிகள் உட்பட 267 பேர் தனிவிமானம் மூலம் எதென்சிற்கு புறப்பட்டனர். மற்றவீரர்கள் தனித்தனி குழுக்களாக புறப்படவுள்ளனர். சீனக் குழுவில் இடம் பெற்றுள்ள 407 வீரர்கள் எதென்சில் நடைபெறும் 28 விளையாட்டுக்களில் 26 இல் பங்கேற்கின்றனர்.இவர்களில் 84 பேர் ஏற்கனவே நடைபெற்ற மூன்று ஒலிம்பிக்கில் பங்கேற்ற அனுபவம் உள்ளவர்கள். 323 பேர் முதல் முறையாக ஒலிம்பிக்கில் பங்கேற்க உள்ளனர். சிட்னி ஒலிம்பிக் பதக்கப்பட்டியலில் சீனா மூன்றாவது இடத்தைப் பிடித்தது. ஒலிம்பிக் வரலாற்றில் சீனா பெற்ற அதிக பட்ச இடம் இதுவாகும்.




# வேண்டுமென்றே நாங்கள் தோற்கடிக்கப்பட்டோம் போட்டி நடுவர் எமக்கு அநீதி இழைத்துவிட்டார்

## சீன பயிற்சியாளர் ஏரிஹான்

ஆசியக்கோப்பை கால்பந்து இறுதிப்போட்டி சர்ச்சைகளை கிளப்பியுள்ளது. 'எங்கள் அணிக்கு அநீதி யிழைத்து விட்டனர்' என்று குற்றம் சாட்டி பதக்கத்தை புறக்கணித்தார் சீனப் பயிற்சியாளர்.

பதினாறு அணிகள் பங்கேற்ற ஆசியக் கோப்பை கால்பந்துத் தொடர் சீனாவில் நடந்தது. பீஜிங் நகரில் கடந்த வெள்ளியன்று நடந்த இறுதிப் போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் சீனாவை வீழ்த்தி ஜப்பான் சம்பியன் பட்டம் வென்றது. இந்தப் போட்டியில் நடுவர்கள் அளித்த சில முடிவுகள் சர்ச்சையைக் கிளப்பின. குறிப்பாக, ஜப்பான் வீரர் கையால் தள்ளி விட்டு கோல் அடித்தார். சீன வீரர்கள் எதிர்ப்பையும் மீறி அதை கோலாக அறிவித்தார் குவைத் நடுவர் சாத் கமீல்.

அவர் கொடுத்த 'ப்ரீ-கிக்' வாய்ப்பும், ஜப்பான் வெற்றிக்குச் சாதகமாக அமைந்துவிட்டது இதனால், கொந்தழித்துப்போன சீன ரசிகர்கள் யப்பான் அணிக்கு எதிராக கோஷம் எழுப்பியபடி, போட்டி முடிந்ததும் பெரும் வன்முறையில் இறங்கினர். பொலிசார் தடியடி நடத்தி வன்முறையைக் கட்டுப்படுத்தினர்.

இது ஒருபுறம் இருக்க, ஆட்டம் முடிந்ததும் நிருபர்களைச் சந்தித்த சீனப் பயிற்சியாளர் ஏரி ஹான் (நெதர்லாந்து), "குவைத் நடுவர் எங்களுக்கு அநீதி இழைந்து விட்டார். வேண்டுமென்றே நாங்கள் தோற்கடிக்கப்பட்டோம். இப்படி ஒரு தோல்வியை என்னால் ஏற்றுக் கொள்ளவே முடியாது, என்று ஆவேசமாகப் பேட்டியளித்தார். அத்துடன், இரண்டாம் இடம் பிடித்ததற்கான பதக்கம் வாங்க மறுத்து வெளியேறவும் செய்தார்.


வெற்றிபெற்ற ஜப்பான் அணி

இதனால் ஆசியக் கால்பந்து அமைப்பு கடுங்கோபம் அடைந்துள்ளது. ஆசியக் கால்பந்து அமைப்பின் தலைவர் பீட்டர் வேலப்பன் அளித்த பேட்டியில் .ஜப்பான் போன்ற ஒரு வலுவான அணியிடம் கிடைத்த தோல்வியை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் வேண்டும். ஏரி ஹான் தனது செயலால் இரு அணிகளை மட்டுமல்ல பார்வையாளர்கள், முக்கியப் பிரமுகர்கள் அனைவரையும் அவமதித்து விட்டார். தனது மரியாதைக் குறைவான நடவடிக்கையால் கால்பந்து அமைப்பையும் வேதனைப்படுத்தி விட்டார். இது போன்ற முக்கியமான போட்டிகளின் போது விளையாட்டு உணர்வுகளை நாகரீகமாக வெளியிடத் தெரிந்திருக்க வேண்டும்." என்றார் வேலப்பன்.

# யோகபுரம் ம.வி, துணுக்காய் அ.த.க.பா.மாணவிகள் தேசியமட்ட மெய்வல்லுனர் போட்டிக்குத் தகுதி பெற்றனர்

(மல்லாவி)

வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்திலான மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டி கடந்த 24 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரையும் திருகோணமலையில் உள்ள மக்கேசர் விளையாட்டு அரங்கில் இடம் பெற்றது. இப் போட்டியில் பங்குபற்றிய 21 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 100 மீற்றர்தடைதாண்டல் ஓட்டப்போட்டியில் மல்லாவி யோகபுரம் மகா வித்தியாலய மாணவி கந்தசாமி அனித்தா1 ஆம் இடத்தையும், 15 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் துணுக்காய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த மாணவி சி.பவிதா இரண்டாம் இடத்தினையும்பெற்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு கல்விச் சமூக மட்டத்திலும், மக்கள் மத்தியிலும் பாராட்டுதல்கள் கிடைத்துள்ளன. (12)


கந்தசாமி அனித்தா


சி.பவிதா


# விருப்பம் இல்லாத போட்டியில் பங்கேற்கிறேன் ஈரானின் ஒரே ஒரு வீராங்கனை ஆதங்கம்

எதென்ஸ் ஒலிம்பிக்கில் விருப்பம் இல்லாத விளையாட்டில் பங்கேற்கவிருப்பதாக ஈரான் வீராங்கனை வேதனை வெளியிட்டுள்ளார். இஸ்லாமிய நாடான ஈரானில் பெண்களுக்கு உடை விடயத்தில் ஏகப்பட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவது வழக்கம். இதனால் இவர்களால் ஜிம்னாஸ்டிக்ஸ், நீச்சல் பீச்வொலிபோல், தடகளம் போன்ற போட்டிகளில் பங்கேற்க முடிவதில்லை. இந்த விதிமுறைகளால் தான் அதிகம் பாதிக்கப்பட்டதாக கூறும் ஈரான் சார்பில் ஒலிம் பிக்கில் பங்கேற்கும் ஒரே ஒரு வீராங்கனை யான நசீம் ஹசன் (19 வயது) "எனது விருப்ப விளையாட்டு ஜிம்னாஸ்டிக்ஸ்தான். ஆனால் உடை கட்டுப்பாடு காரணமாக துப்பாக்கி சுடுதல் போட்டியை தேர்வு செய்ய வேண்டியதாயிற்று. இந்த முறை பதக்கம் வெல்ல வாய்ப்பில்லை. ஆனாலும் 2008 ஒலிம்பிக்கில் நிச்சயம் சாதிப்பேன் என்றார்.

# சினேக பூர்வ கால்பந்து போட்டி

கிளிநொச்சி கால் பந்தாட்ட லீக் அணிக்கும் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் அணிக்கும் இடையிலான சினேகபூர்வ கால் பந்தாட்டப் போட்டி ஒன்று நாளை மாலை நடைபெறவுள்ளது. கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் மேற்படி போட்டி நடைபெறவுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட கால்பந்தாட்ட லீக் அறிவித்துள்ளது.

## சிந்தனைக்கு



சொல்லுக்கு முன்னே எப்போதும் செயல் இருக்க வேண்டும் செயலால் தான் நாங்கள் செல்வாக்குப் பெற்றோம்; செயல்தான் நமது நடவடிக்கைகளுக்கு அரசியல் வடிவம் தருகின்றது.

தமிழீழ தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 11-08-2004
மின் அஞ்சல்
Daily@eezhanatham.com
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

## கால வீணடிப்பு!

விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கு மாற்றீடான திட்டமொன்றை சனாதிபதி சந்திரிகா தயாரித்துவருவதாக அண்மைய தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனை நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சிறிலங்கா அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபாலவும் ஊர்ஜிதம் செய்துள்ளார்.

இது குறித்து யாழ்.இல் பிரஸ்தாபித்த ஜயந்த தனபால ஒருபக்க யோசனைகள் குறித்துப் பேசுவதைக் காட்டினும் இரு பக்க யோசனைகள் குறித்து ஆராய்வது சிறந்ததெனவும் தெரிவித்துள்ளார். ஜயந்த தனபாலவின் இக் கூற்றுக்கள் சனாதிபதி சந்திரிகா புதிய திட்டங்களை முன்வைத்துப் பேச்சுக்களை ஆரம்பிக்க விரும்புகின்றார் என்பதையே வெளிப்படுத்துவதாயுள்ளது.

சனாதிபதி சந்திரிகாவின் இந் நடவடிக்கைக்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம். ஒரு புறத்தில் விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்து பேசுவதற்கு அவர் விரும்பாமல் இருக்கலாம். மறு புறத்தில் சிங்களப் பேரினவாதிகளின், ஜே.வி.பியின் விருப்பு வெறுப்புக்களை பிரதி பலிப்பதாக அவரது திட்டவரைவு இருக்கலாம்.

ஆனால் சனாதிபதியின் திட்டவரைபானது எத்தகைய நோக்கத்தைக் கொண்டதாக இருப்பினும் பேச்சுவார்த்தைகளை விரைவில் ஆரம்பிப்பதற்கும், பொருத்தப்பாடானதாக இருக்க மாட்டாது. மாறாகப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்படுவதற்கும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான முடிவொன்றை விரைவில் பெறுவதற்கும் விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள நகல் திட்டம் ஏற்றதானதொன்றாக இருக்கும். மீண்டும்,மீண்டும் தொடக்கப் புள்ளிக்குப் போதல் என்பது நடைமுறையில் சாத்தியப்பாடானதொன்றல்ல.

ஏனெனில் விடுதலைப்புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்த நகல் திட்டம் ஒழுங்கானதொரு வடிவத்தைக் கொண்டதாகவுள்ளது. இரண்டாவதாக இந் நகல் திட்டமானது பரிமாறப்பட்டு இரு தரப்பினரிடையேயும் ஏற்கனவே ஆராயப்பட்டும் உள்ளது.

அதை விடுத்தோ அன்றி அதனுடன் சேர்த்தோ இன்னொரு நகல் திட்டத்தை ஆராய முற்படுவதென்பது ஒரு புறத்தில் தேவையற்றதும் மறு புறத்தில் காலத்தை வீண் விரையம் செய்வதுமாகும். குறிப்பிட்டுச் சொல்லப்போனால் அரசின் நகல் திட்டமானது பரிமாறப்பட்டு அது தொடர்பான முடிவுகள் பெறப்பட்டு பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுதல் என்பது மேலும் காலதாமதத்தை ஏற்படுத்தக் கூடியதாகும்.

அதுவுமல்லாமல், ஒரு நகல் திட்டம் ஆராயப்பட்டுக்கொண்டிருக்கையில் மற்றொரு நகல் திட்டத்தை அறிமுகம் செய்வதோ, பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருதல் என்பதோ முன்னைய நகல் திட்டத்தை நிராகரிப்பதாகவே அர்த்தம் கொள்ளத்தக்கதாக இருக்கும்.

மேலும் சிறிலங்கா ஆட்சியாளர்கள் எத்தகைய நகல் திட்டத்தை தயாரிப்பார்கள் என்பதும் ஓரளவேனும் எதிர்வு கூறத்தக்கதொன்றாகவே இருக்கும். இது குறித்து கடந்த கால அனுபவங்களும் உண்டு. பிரதேச ஒருமைப்பாடு, ஐக்கியம், பாதுகாப்பு என்ற ரீதியில் தமிழ் மக்களின் தன்னாட்சிக்கான, அதிகாரங்களை இல்லாதொழிக்கும். அன்றி அங்கீகரிக்க மறுப்பதாகவே இந் நகல் திட்டம் இருக்கும் எனத் துணிந்து கூறமுடியும்.

ஆகையினால் அரசாங்கத் தரப்பு இடைக்கால நிர்வாகத்திற்கானதொரு நகல் திட்டம் ஒன்றை திணிப்பதென்பது ஒரு புறத்தில் கால தாமதத்தை ஏற்படுத்தவும்,மறு புறத்தில் விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான யோசனைகளை நிராகரிப்பதாகவுமே இருக்கும். ஆனால் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்படுவதை விரும்பும் அரசாங்கம் மேற்கூறப்பட்ட இரண்டு காரணிகளையும் நேரடியாகவும், வெளிப்படையாகவும் தெரிவிக்கவிரும்பாமல் அன்றி தெரிவிக்க முடியாமல் உள்ளது என்பதே யதார்த்தமாகும். இதன் காரணமாகவே மாற்றுத் திட்டயோசனை ஒன்றை அது முன்வைக்கத் தயாராகிவருகின்றது.

ஆகையினால் சமாதானப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப் படவேண்டுமானால் விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக் காலத் தன்னாட்சி நிர்வாகம் குறித்துப் பேசுவதே சாத்தியப் பாடானதாகும். பேச்சுவார்த்தை மேசையில் இத் திட்டத்தில் மாறுபாடுகளையோ, திருத்தங்களையோ மேற்கொள்வதெனில் மேற் கொள்ளலாம். இதனை விடுதலைப்புலிகள் ஏற்கனவே வெளிப் படுத்தியுமுள்ளனர்.இதனை விடுத்து மாற்றுத் திட்டம் ஒன்றை முன் வைத்தல் என்பதும், இரண்டு திட்டங்கள் குறித்துப் பேசுவதென்பதும் தேவையற்றதும், காலத்தை வீண்விரயம் செய்வதுமாகும். இனப்பிரச் சினைத் தீர்வை நோக்கி முன்னேறுவதற்கு சிறந்ததொரு வழிமுறையாக இது இருக்க மாட்டாது.

---

### இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக

# கட்சித்தலைவர்களை ஒற்றுமைப்படுத்த

# மல்வத்த பீடாதிபதி விருப்பம் தெரிவிப்பு

(கொழும்பு)

எரிந்து கொண்டிருக்கும் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு இறுதியான தீர்வைக் காண்பதற்கு அனைத்து அரசியற் கட்சிகளின் தலைவர்களையும் இணைத்து ஒற்றுமையாக்க ஆவலாக இருப்பதாக மல்வத்த பீடாதிபதி திப்பற்றுவேவ சிறிசித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவின் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் அமைச்சர் டி.ஈ.டபிள்யூ குணசேகரவுடன் நேற்று முன் தினம் நடாத்திய சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும்.அவர் கூறுகையில்; ஒற்றுமையாக வேண்டும் என்ற தனது கோரிக்கைக்கு தக்கவாறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் செயற்படவில்லை. ஆயினும் பொது நோக்கிற்காக அவர்களை ஒற்றுமைப்படுத்த தான் ஆவலாக உள்ளதாகவும், நாட்டின் பிரதான விடயமான இனப்பிரச்சினை பொருளாதார அபிவிருத்திக்கு தடையாக உள்ளதாகவும் தெரிவித்த தேரர், தற்போது நடைமுறையில் உள்ள அரசியலமைப்பில் திருத்தம் கொண்டு வரப்படவேண்டியதன் அவசியம் குறித்தும் அறிவுறுத்தியுள்ளார்.வேறுபட்ட அரசியற் குழுக்களுக்கிடையே ஒரு புரிந்துணர்வு ஏற்பட வேண்டியது முக்கியமானது என சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் குணசேகர தெரிவித்தார்.

# ஹெல உறுமயவின் ஆதரவைப்பெற அமைச்சர் தலைமையில் குழு முயற்சி

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதாக தற்போதைய அரசின் நீதி அமைச்சர் டபிள்யூ . டீ.ஏ. செனவிரத்ன, ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர்களான ஓமல்பே சோபித தேரர், அத்துரலியரத்ன தேரர் ஆகியவர்களோடு பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார். இப் போக்குவார்த்தையில் முன்னாள பிரதிப பாதுகாப்பு அமைச்சர் அனுரு[illegible]த்தரத்வத்[illegible]தவும் கலந்து கொண் டுள்ளார்.

இப்பேச்சுக்களில் ஆராயப்பட்ட விடயங்கள் சனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. சனாதிபதி அங்கீகாரம் கிடைத்தவுடன் அரசியல் உடன்பாடு ஒன்றுக்கு சுதந்திரக் கட்சியும், ஜாதிக ஹெல உறுமய கட்சியும் வரும் என கட்சியின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### -கட்டாய மதமாற்றத்தடை குறித்து-

# ஆதரவானதும், எதிரானதுமான மனுக்கள் குறித்து இரகசியத் தீர்ப்பு சபாநாயகருக்கு அனுப்பப்படும்

கட்டாய மதமாற்றத்தடை குறித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்பட்டுள்ள தனிநபர் பிரேரணை தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட சார்பு மற்றும் எதிர் மனுக்கள் மீதான இரகசிய தீர்ப்பு சனாதிபதிக்கும், பாராளுமன்ற சபாநாயகருக்கும் அறிவிக்கப்படவுள்ளது.

ஜாதிக ஹெல உறுயவின் பாராளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித இந்த தனிநபர் பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்பித் திருந்தார் இதற்கு எதிராக பல் வேறு தரப்பினரும் தமது மனுக் களை தாக்கல் செய்திருந்தனர்.இவற்றை ஆராய்ந்த உயர்நீதி மன்றம் மனுக்களின் இரகசியத்தீர்ப்பை சனாதிபதிக்கும், சபாநாய கருக்கும் அறிவிப்பதாக தெரிவித்துள்ளது. (32)

# விமுக்திக்கு காணி வழங்கியதான கூற்றுக்கு சனாதிபதியின் செயலர் மறுப்பு

முன்னாள் காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன சுமத்திய குற்றச்சாட்டை சனாதிபதியின் செயலர் டபிள்யூ ஜே .எஸ் சேனாரத்ன மறுத்துள்ளார். தாம் காணி அமைச்சராக இருந்த வேளையில் மேற்கொள்ளப்பட்ட காணி சீர்திருத்த சட்டத்தின் கீழ் சனாதிபதியின் மகனான விமுக்திக்கும் காணி வழங்கப் பட்டதாக ராஜித சேனாரட்ன தெரிவித்திருந்தார். தாம் அமைச்சராக இருந்த வேளையில் அரசாங்கக் காணிகளை துஷ்பிரயோகம் செய்ததாக ஜே வி. பி சுமத்திய குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இந்த தகவலை வெளிப்படுத்தியிருந்தார்.இந்த நிலையில் நேற்று அதற்கு பதிலளித்துள்ள சனாதிபதியின் செயலர் ராஜித சேனாரத்ன சுமத்திய குற்றச்சாட்டை மறுத்துள்ளார். (32)

### ஐ.தே.மு.அமைச்சர்கள் மீதான

# லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு குறித்து சாட்சியமளிக்க முன்வரவில்லை

ஐக்கிய தேசிய முன்னணியின் முன்னைய அமைச்சர்களுக்கு எதிராக 30 லஞ்ச ஊழல்கள் குற்றச்சாட்டுகள் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆனால் இதுவரை அக்குற்றசாட்டுகளுக்கு எதிராக சாட்சிகள் முன்வராமையால் விசாரனைகள்யாவும் இடைநிறுத் தப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்ட முன்னைய அமைச்சர்கள் லஞ்ச ஆணையாளர் சபை முன் இது வரை சமுகம் தரவில்லை என லஞ்ச விசாரனை மேற்கொள்ளும் சபை அறிவித்துள்ளது.

## கசிப்புடன் பிடிபட்டார்

(கொழும்பு)

கசிப்பு கடத்தியமைக்காக அரசியற் கட்சி யொன்றின் இளைஞர் முன்னணித் தலைவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கலால் (தீர்வை) திணைக் களத்தின் விசேட நடவடிக்கை பிரிவினர் மேற்கொண்ட திடீர்ச் சோதனை நடவடிக்கையின் போது 2200 போத்தல்கள் கசிப்பினை மினுவாங்கொடயிலிருந்து குருணாகலவிற்கு வானொன்றில் கடத்திச் சென்ற குறித்த நபரும் அவ்வாகனத்தின் சாரதியும் கைது செய்யப் பட்டனர்.

இக் கைதினைத் தொடர்ந்து இவர்களை விடுதலை செய்யுமாறு கோரி அரசியல் வாதியின் கூட்டாளிகளிடமிருந்து பல தொலைபேசி அழைப்புக்கள் தமக்குக் கிடைத்ததாக கலால்திணைக் களத் தினர் கூறியுள்ளனர்.

### முல்லைத்தீவு மாவட்ட

# மாதர் சங்கங்களுக்கான ஆய்வுப்பட்டறை

(புதுக்குடியிருப்பு)

முல்லை.மாவட்ட மாதர்சங்களுக்கான ஆய்வுப்பட்டறை முல்லை. மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் நேற்று காலை 10.00 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரை பெண்கள் ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் சுதாமதி ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியை போராளி தமிழ்க்கவி ஏற்றிவைத்தார். தொடர்ந்து முல்லை. மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணன், தமிழீழ பெண்கள் ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் சுதாமதி, முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் வேழினி, போராளி தமிழ்க்கவி ஆகியோர் கருத்துரையை வழங்கினர்.

சிறப்புரையை வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.கனகரத்தினம் அவர்கள் ஆற்றினார். இந் நிகழ்வில் பெண்கள் அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்பட்டது. (08)

# கொல்லப்பட்டதாகக் கருதப்பட்டவர் யாழ்.இல் உயிருடன் கண்டுபிடிப்பு

## அவரைக் கொன்றதாகச் சந்தேகத்தில் ஒருவர் சிறையில்

நீதிமன்றினால் உயிரிழந்ததாகக் கருதப்பட்ட நபர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை இவரைக் கொலை செய்தவரெனக் குற்றஞ்சாட்டப்பட்ட நபரொருவர் அனுராதபுர சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் முல்லைத்தீவிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் வசித்து வந்த பொன்னையா செல்வராசா என்னும் நபர் கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் காணாமற் போயிருந்தார். எனினும் குடும்பப் பகை காரணமாக அவரை இராகவன் தங்கவேல் என்பவரே கொலை செய்துவிட்டதாகக் காணாமற் போனவரின் குழந்தைகள் இருவரும் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைச் செய்திருந்தனர்.

இதையடுத்தே இராகவன் தங்கவேலினைக் கைது செய்து அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்க நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இதனிடையே காணாமற் போனதாகக் கூறப்பட்ட பொன்னையா செல்வராசா உயிருடன் யாழ்ப்பாணத்தில் இருப்பது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து நீதிமன்றின் கவனத்திற்கு இவ்விடயம் கொண்டுவரப்பட்டதையடுத்து அந்நபரை நீதிமன்றில் ஆஜர் படுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த நபர் நேற்று மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ் அலுவலகத்தில் ஆஜர் படுத்தப்பட்டு அவரது வாக்கு மூலம் பெறப்பட்டிருந்தது. (27)

# வீதித்திருத்தத்திற்கு பறிக்கப்பட்டிருந்த கற்குவியலில் இரு உந்துருளிகள் மோதின

## அடுத்தடுத்து நடந்த விபத்துக்களில் நால்வர் காயம்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி ஏ-9 வீதியில் வீதித்திருத்தத்திற்குப் பறிக்கப்பட்டிருந்த கற்குவியலுடன் அடுத்தடுத்து இரு உந்துருளிகள் மோதியதில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

இரு நிமிடங்கள் நேரஇடைவெளியில் இவ்விபத்துகள் இடம் பெற்றுள்ளன. இதேவேளை மற்றொரு விபத்தும் கிளிநொச்சி ஏ-9 வீதியில் இடம் பெற்றுள்ளது.

நேற்று இரவு 9.30 மணியளவில் உடையார் கட்டிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த உந்துருளி கிளிநொச்சி தொலைத்தொடர்பு பரிவர்த்தன நிலையத்திற்கு அருகில் வீதி புனரமைப்பிற்காக வீதியில் தாருடன் சேர்க்கப்பட்ட கற்குவியலில் மோதியதால் அதில் பயணித்த இருவரும் காயமடைந்த தோடு உந்துருளியும் சேதமடைந்தது. இச்சம்பவம் நடந்து இரு நிமிட இடைவெளியில் இதே இடத்தில் மற்றுமொரு விபத்து நடைபெற்றுள்ளது. புதுக்குடியிருப்பு கைவேலியிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த உந்துருளி முன்னர் விபத்து நடந்த அதே கற்குவியலுடன் மோதி தூக்கி எறியப்பட்டது. உந்துருளியில் பயணித்த கைவேலி புதுக்குடியிருப்பைச் சேர்ந்த உதயகுமார் (வயது-20) என்பவர் படுகாயமடைந்து கைமுறிந்து மயக்கமுற்ற நிலையில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இவருடன் பயணித்தவர் சிறுகாயங்களுக்குள்ளானார். உந்துருளியும் கடும் சேதமடைந்தது. ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் இவ்விரு விபத்துக்களும் நடைபெற அங்கு வீதி புனரமைப்பிற்காக குவிக்கப்பட்டிருந்த கற்குவியலே காரணமாக இருந்ததாகவும் அப்பகுதியில் வீதி புனரமைப்பு நடைபெறுவதற்கான குறிகாட்டிகள் எதுவும் வைக்கப்படாதிருந்ததுமே காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வீதி கடந்த சில மாதங்களுக்கு முன்னரே புனரமைக்கப்பட்ட போதும் இருப்பினும் வீதிகள் இடையிடையே திட்டுக்கள் காணப்படுகின்றமையும் பல வீதிவிபத்துக்களுக்கு முக்கிய காரணியாக அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கி வந்துகொண்டிருந்த பாரஊர்தியை முறிகண்டியிலிருந்து கிளிநொச்சிக்கு வந்துகொண்டிருந்த முச்சக்கர வண்டி வேகமாகக் கடக்க முயன்ற வேளை பாரஊர்தியுடன் மோதியதில் முச்சக்கர வண்டி சேதமடைந்தது இதில் பயணித்த எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச,தீ)

# கைவிரல் அடையாளம் பதிவுசெய்யமுடிவு

கடவுச்சீட்டு வழங்கலின் போது கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் கடவுச்சீட்டு வழங்கலின் போது துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதையடுத்தே பின் இந்த நடவடிக்கை குறித்து ஆராயப்பட்டுள்ளதாகக்குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. பெரும்பாலும் இந்த நடைமுறை அடுத்த வருடம் தை மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை பல வெளிநாடுகளில் செயற்படுத்தப்படுகின்ற போதும் இலங்கையில் அதனை நடைமுறைப் படுத்த உரிய சட்ட ஒப்புதல் வழங்கப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# புதுக்குடியிருப்பில் வீதி விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் நேற்று இடம் பெற்ற வீதி விபத்தில் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு-முல்லை வீதியில்-வைத்தியசாலைக்கு அருகே உந்துருளியொன்றும் மிதிவண்டியொன்றும் மோதிக் கொண்டதில் மிதிவண்டியில் சென்றவர் படுகாயம் அடைந்தார்.

புதுக்குடியிருப்பு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த க.ரஞ்சித்குமார் என்ற குடும்பஸ்தரே படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (08)

## பொ.ஐ.மு....

யோசனை, சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது உள்ளிட்ட பல விடயங்களைப் பேசுவதற்காகவே பொதுஜன ஐக்கிய முன்னணி நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தைக் கூட்டுமாறு கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுஜன ஐக்கிய முன்னணியில் ஜேவிபி உள்ளடங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(32)

## தென்னிந்தியா...

மான நாடுகடத்தல் குறித்த அச்சம் பற்றிக் கூறுகையில் இது விடயத்தில்ஐக்கியநாடுகள் முகவர் ஸ்தாபனங்கள் கருணையோடு தலையிட வேண்டும். இறுதி அரசியல் தீர்வு எட்டப்படும் வரை முகவரின் உத்தரவிற்கெதிரான இது போன்ற முயற்சிகளை தடுத்து நிறுத்த வழிசெய்யவேண்டும் என்றும் தமிழ்ச்செல்வன் கேட்டுக் கொண்டார்.

இவரது கோரிக்கைகக்கு பதிலளித்த 'நெய்ல்றைற்' 'அகதிகள் தொடர்பான விடயத்தில் ஐ.நா. முகவர்கள் அர்த்தமுள்ள தலையீடுகளை ஏற்படுத்துவதற்காகக் கடுமையாகப் பாடுபட்டு வருகின்றனர் என்றார்.

இந்த விடயம் உட்பட மட்டக்களப்பு, அம்பாறையில் மனித உரிமைகள் மீறல் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பானதுமான இரண்டு விடயங்கள் குறித்து ஆழமாகக் கலந்துரையாடப்பட்டது".

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளருடன் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனும் கலந்துகொண்டார்.

மேலும் வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் சிரேஷ்ட மனிதஉரிமைகள் ஆலோசகர் ரோறிமுஸ்கோவன் இணைத் தொடர்பாளர் எட்வேட் பென்சன், கெயிசுகே முராறா (யாழ்.அலுவலகத்தலைவர்) மற்றும் கேற்பெரி யுனிசெப் பிரதிநிதி ஹிரிகோ நிஷினொ ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## கண்ணிவெடி...

டெய்லர் உள்ளிட்ட குழுவே யாழ். குடாநாட்டிற்கு வருகை தந்தது.

பலாலி இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற உயர்மட்டச் சந்திப்பில் குழுவினர் யாழ்.மாவட்ட படைத்தலைமையுடன் பேச்சுக்களை நடாத்தினர். பின்னர் படையினரால் கண்ணிவெடி அகற்றல் பணிகள் முன்னெடுக்கப்படும். தென்மராட்சி தெற்கின் உயர்பாதுகாப்பு வலயப்பகுதியிலுள்ள தனங்கிளப்பு மற்றும் புத்தூர், அரியாலை பகுதிகளுக்குக்குழுவினர் விஜயம் செய்தனர். படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்ணிவெடியகற்றல் பணிகளையும் அவர்கள் பார்வையிட்டனர்.

பின்னர் பி.ப.3.00 மணியளவில் யாழ்.செயலகத்திற்கு விஜயம் செய்த குழுவினர் மாவட்ட கண்ணிவெடியகற்றல் இணைப்பு அலுவலகத்தில் மேலதிக அரச அதிபர் க.சிவசாமி தலைமையிலான அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தினர்.

இதைத் தொடர்ந்து ஹலோ ரிரஸ்ற் தொண்டமைப்பினரால் கண்ணிவெடியகற்றல் பணிகள் முன்னெடுக்கப்படும் அரியாலை-செம்மணி மற்றும் புத்தூர் பகுதிகளுக்கு விஜயம் செய்து அவர்களது பணிகளையும் குழுவினர் பார்வையிட்டனர். அமெரிக்க அரசின் "றொங்கோ" அமைப்பே இப்பொழுது இலங்கை இராணுவத்திற்கு கண்ணிவெடியகற்றல் பயிற்சியை யாழ். இல் வழங்குகிறது. (27,33)

# ஜே.வி.பி யுடனான சனாதிபதியின் சந்திப்பு கைவிடப்பட்டது

## நேரமின்மை காரணமாம்

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும், ஜே.வி.பிக்கும் இடையில் நேற்று மாலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சந்திப்பு கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சனாதிபதி சந்திரிகாவிற்கு வேலைப் பழுகாரணமாகவே இச்சந்திப்பு நடைபெறவில்லை எனப் பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜே.வி.பி சார்பில் விவசாய அமைச்சர் அனுர குமார திசாநாயக்க அவ்வாறான சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்படவில்லை எனக் கூறினார். ஆனால் இச்சந்திப்பு சனாதிபதிக்கு நேரமில்லாமையினால் கைவிடப்பட்டதாக தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

விவசாய அமைச்சின் சில அதிகாரங்கள் பறிக்கப்பட்டமை தொடர்பாகவும் இச்சந்திப்பில் ஆராயப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (32)

# மாங்குளம் திலீபன் மருத்துவசேவையில் விசேட மருத்துவ சிகிச்சை

வெளிநாட்டிலிருந்து வருகை தந்த விசேட மருத்துவர்களால் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை மாங்குளத்தில் நாளை வியாழக்கிழமை சிறுநீரகம் சம்பந்தமான சிகிச்சை, உளநல மருத்துவம், மகப்பேற்றியல், பொது மருத்துவம், பல்மருத்துவம் என்பன நடைபெறவுள்ளது. எனவே இதில் பயன்பெற இருப்போர் குறித்த நாளில் மாங்குளம் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை நிலையத்தில் சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## பலாலி விமானப் படைத்தளத்தில்

# செய்தியாளர் மீதான மிரட்டல் குறித்து விசாரிக்கப் படை அதிகாரிகள்குழு

செய்தி சேகரிக்கச்சென்ற வேளையில் செய்தியாளர் ஒருவர் பலாலி விமானப்படைத்தளத்தில் வைத்து கொலைப் பயமுறுத்தலுக்குள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென இராணுவ உயர் மட்டக்குழுவொன்று படைத்தலைமையால் நியமிக்கப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டுத் தொடர்பாக யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதிக்கெதிராகக் குறித்த செய்தியாளரால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடொன்று செய்யப்பட்டிருந்தது.

இம்முறைப்பாட்டினடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பாக திருப்தியற்றதோர் நிலை நிலவியிருந்த நிலையில் இவ் விசாரணை தொடர்பாக பூர்வாங்க அறிக்கையொன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பாக படைத்தலைமையின் கவனத்திற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் கொண்டுவரப்பட்டதையடுத்தே இவ்விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கேணல் மொகான் ஜெயவர்த்தன தலைமையிலான இவ்விசாரணைக் குழுவினர் எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ் குடாநாட்டிற்கு வருகை தரவுள்ளனர். மனித உரிமை கள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் வைத்து அச்சுறுத்தப்பட்ட செய்தியாளரது வாக்கு மூலத்தையும் குழுவினர் பெறவுள்ளனர். (27)

# யாழ்.இல் படையினருடன் இணைந்து பொலீசார் வீதிச் சோதனை

யாழ். குடாநாட்டில் படையினருடன் இணைந்து வீதிச் சோதனை நடவடிக்கைகளை பொலிசார் ஆரம்பித்துள்ளனர். இரவுவேளைகளில் முக்கிய சந்திகள் மற்றும் பிரதான வீதிகளில் வைத்து வாகனங்கள் இவ்வாறு சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றன.

படையினர் ஆயுத பாணிகளாக பாதுகாப்பு வழங்க பொலிசார் வாகனங்களது ஆவணங்களைப் பரிசீலிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பெரும்பாலும் குறித்ததோர் பகுதியில் என்று இல்லாதவாறு நாளுக்கு நாள் புதிய இடங்களில் இச்சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக, முன்னர் வடமராட்சி மற்றும் தென்மராட்சிப் பகுதிகளுக்குள் நுழையும் வாகனங்கள் இராணுவ தடை முகாம்கள் பகுதியில் வைத்து சோதனைக்குள்ளாக்கப்பட்டு வந்தன. எனினும் தற்போது படை முகாம்களை அண்டியதாக உள்ள பிரதான வீதிகள் மற்றும் சந்திகளில் இச்சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (27)

## சிறிலங்கா...

காரணம் தெரிவிக்கப்படாத போதிலும், தூதரக அலுவலர் ஒருவருக்கு வெள்ளித்துகள்கள் அடங்கிய கடிதமொன்று அனுப்பப்பட்டமையே காரணம் எனப்பொலிசார் தெரிவித்துள்ளனர். இந்த வெள்ளித்துகள்கள் அந்திராஸ்க் என சந்தேகிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

## இரு...

பகுதியைச் சேர்ந்த சீனித்தம்பி யோகராசா (வயது39)என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் கல்லடியில் வசித்து வந்த வர் எனவும் களுவாஞ்சிக்குடி மருத் துவ மனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதே வேளை நேற்று மாலை கொம்மாந்துறையில் மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கந்தையா சண்முகராசா (வயது31)என்பவர் படுகாயமடைந்த நிலையில் மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 11 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.